بسم الله الرحمن الرحيم


# அல்கலாம்

# AL-KALAM

பத்திராதிபர் :—கூ. அ. அப்துல் மஜீத்.

| வால்யூம். 2 | 1925ஹு செப்டம்பர்மீ | பகுதி. 9 |
| --- | --- | --- |


## திருநபியின் ஜனனம்

(இமாமுல்ஹிந்து மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் எழுதியது)

பூமி தாகவிடாய் கொண்டபோது வானம் பூமி முதலிய யாவற்றையும் படைத்த அல்லாஹு தஆலா மழை பெய்யச் செய்கிறான். மனுக்கள் தங்களின் உணவுக்காக கவலை கொள்ளும்போது அல்லாஹு தஆலா வேளாண்மைக்குரிய வஸந்த காலத்தைத் தருகின்றான். உலகம் வறண்டு பசுமையின்றி கறிந்துபோன வேளையில் ஜலத்தை சுமந்திருக்கும் மேகங்கள் மழை என்னும் தயவைப்புரியும்படி அல்லாஹு தஆலா உத்தரவிடுகின்றான். இம்மழையின் மூலமாய் அல்லாஹு தஆலா மனுக்களின் கவலையை யகற்றி சந்தோஷிக்கச் செய்கின்றான்.

மனுவர்க்கத்தார் நேரான வழியை யடைவதற்காக அல்லாஹு தஆலா எடுத்துக்காட்டும் உதாரணம், திருஷ்டாந்தம் முதலியவைகள் சதா இயற்கைப் பொருள், கால நிகழ்ச்சி ஆகியவைகளைச் சார்ந்ததாகவே யிருக்கின்றன. ஏனெனின்? மனிதர்கள் உண்மையை சுலபமாய்த் தெரிந்து கொள்ளுவதற்காகவே. சம்பவிக்காததும், இயற்கையாக வில்லாததுமானவைகளின் மூலமாய் ஜனங்கள் உணர்ச்சியைப் பெறவேண்டுமென்னும் கஷ்டத்தை மனுக்கள் அனுபவிக்க

அல்லாஹுத்தஆலா பிரியப்படவில்லை. அல்லாஹுத ஆலா அறிவுறுத்துபவைகளை உணருவதற்குப் பிரத்தி யேகமான கல்வியும் குறிப்பிட்ட தேசத்தின் நடவடிக்கையும் அவசியமில்லை. ஆனால் அல்லாஹுத ஆலாவின் ஒவ்வொரு படிப்பினையும் பொதுவாயும்,இயற்கை யானவைகளை யொட்டிய தாயுமே இருக்கின்றது. ஆகவே காட்டில் காலம் கழிக்கும் இடையனும், பட்டினத்தில் வசிக்கும் நாகரீகம் முதிர்ந்தவனும் அல்லாஹுத ஆலாவின் உண்மைகளை உணர்ந்து பரவச மடைவதில் வித்தியாச மிருப்பதில்லை.

தாங்கள் "பிலாசபா," "ஹிக்மத்" ஆகியவைகளைப் படிக்க வில்லையாயினும், வானத்திலிருக்கும் நக்ஷத்திரங்களைப் பார்ப்பதற்கு ஏற்பட்டிருக்கும் ஆலயத்தின் விலையுயர்ந்த தூரதிருஷ்டிக் கண்ணாடி உங்களுக்குக் கிட்டவில்லையாயினும், விளைவுப்பொருள்களின் குண குணங்களை யொட்டிய அனுபோகம் உங்களுக்கு ஏற்படவில்லையாயினும், பெரும் கலாசாலைகளிலிருந்து பலவருடகாலம் கழிக்கவில்லையாயினும், நீங்கள் கிராமவாசியாக யிருப்பினும், நீங்கள் மலைக்குன்றுகளில் மறைந்து கிடப்பினும், இடிந்தசுவரும் புற்கூரையுமுள்ள உருக்குலைந்துபோன இல்லமே உங்கள் வாசஸ்தலமாக யிருந்து வரினும், நீங்கள் ஆச்சரியமான நக்ஷத்திரங்களின் உள்ளேயும், மற்றவிலையுயர்ந்த பொருள்களின் மத்தியிலும் அல்லாஹுதஆலாவைத் தேடுவதில்லை. நீங்கள் மனுக்களாயும் ஜீவனுள்ளவர்களாயும் பூமியில் வசிப்பவர்களாயு மிருப்பதால் வானத்தி லேற்படும் ஒவ்வொரு மாறுதலின் மூலமாயும், மேகத்தின் ஒவ்வொரு துண்டின் மூலமாயும், ஒவ்வொரு காற்றின் மூலமாயும், ஒவ்வொரு மழைத்துளியின் மூலமாயும் அல்லாஹுதஆலாவையும் அவனுடைய சக்தி, தந்திரம், இரக்கம், தயாளம், பிரியம், கிருபை முதலியவைகளை நிதர்சனமாய்த் தெரிந்துகொள்ளக் கூடும். உங்களுள் எவரும் மனச்சோர்வு, நம்பிக்கை ஆகியவைகளைக் கொண்டு வானத்தை அண்ணார்ந்து பார்க்காதவர்களு முண்டோ? இழந்து போனவைகளை இடி முழக்கம், மின்னல் ஆகியவைகளினூடே நம்பிக்கையோடு எதிர்ப்பார்க்காதவர்களு மிருக்கின்றனரா?

உலகம் காய்ந்து, பூமிதாகவிடாய்க் கொண்டதும் அல்லாஹுத ஆலா மழைபெய்வதற்கான அடையாளங்களை உண்டுபண்ணிவிட்ட போழ்து, ஏககாலத்தில் மனிதர்கள் பயமும் நம்பிக்கையும் மேலிட்டவர்களாய் வானத்தை அண்ணார்ந்து பார்ப்பது அல்லாஹுதஆலாவின் ஓர் பெரும் திருஷ்டாந்த மல்லவா?

உங்கள் பூமிக்காகவும் உங்களுக்காகவும் அல்லாஹு தஆலாவின் சமுகத்தில் ஒரு சொட்டு தண்ணீரைக் கோரி ஏங்கி நிற்காதவர்களுமுண்டோ? பூமியின் ஒவ்வொரு அணுவும் தன்னை நனைத்துக் கொள்ளுவதற்காகவும், தான் செழிக்கவும் அளவற்ற கவலையையடைகின்றன. பூமி தண்ணீரைத் தேடுவதில் தன்னை மறந்து சூரிய வெப்பத்தை அதிகமாய் அனுபவிக்கவும் முற்பட்டு விடுகின்றது.

பூமியிலுள்ள மரம், செடி, புல், பூண்டு முதலிய எல்லாவஸ்துக்களும் தங்களின் இயற்கையான அழகு, வளர்ச்சி, செழுமை முதலியவைகளை இழந்து விடுகின்றன. பறவைகள் தங்கள் கூடுகளிலும், விருக்ஷத்தின் கிளைகள் அவ்விருக்ஷத்திலேயே இருந்து கொண்டும், மனுக்கள் தங்கள் இல்லங்களில் புரண்டுகொண்டும் தண்ணீரைக் கோறி அழுவதோடு ஒவ்வொரு நிமிஷமும் மனஞ் சோர்ந்து (உஷ்ணம் மேலிட்ட) ஆகாயத்தை அடிக்கடி அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அல்லாஹு தஆலா தன் கிருபையின் மூலமாய் மனிதர்களிழந்துவிட்ட நம்பிக்கையை மீண்டும் உண்டு பண்ணி, தவரிப் போனவைகளெல்லாம் கிட்டும்படிச் செய்து மரணத்தருவாயிலிருந்தவைகளுக்கு ஜீவனளிக்கப்பட்டு விட்டதாக உள்ள நற்செய்தியை ஒவ்வொரு அணுவுக்கும் சமர்ப்பித்து விடுகின்றான்.

"மரணக்குறி தோன்றி முழுபூமியும் அழிவதற்கு, கிட்டிவிட்டதோடு மனிதர்கள் நம்பிக்கை அச்சம் ஆகிய இரண்டும் கலந்த பார்வையால் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கும் போது அல்லாஹு தஆலா வானத்திலிருந்து தண்ணீரை இறக்கி வைக்கின்றான். ஆகவே மரணத்திற்குப் பிறகு பூமிக்கு ஜீவனேற்பட்டு விடுகின்றது. அல்லாஹு த ஆலாவின் இவ்வரிய செய்கையில் அறிவுள்ளவர்களுக்குப் பெருந்திருஷ்டாந்தங்கள் இருந்து வருகின்றன வென்பது திண்ணம். ஆகவே நீங்கள் அல்லாஹு த ஆலாவின் கிருபை, அவனுடைய ரக்ஷிப்பு ஆகியவைகளை நோட்டமிடவேண்டாமா?" (அல்குர் ஆனின் வியாக்கியானம்).

## 2

மனிதர்களின் தேகத்திற்கு அவசியமான உணவை யொட்டி மேற் கூறியவாறு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகின்ற அல்லாஹு தஆலா மனிதர்களுடைய ஆத்மாக்களின் பொருட்டு எதையும் செய்யாதிருப்பானா? பூமியின் விண்ணப்பத்தை செவியுற்று அதற்குத் தண்ணீரையும், மனுக்களின் சரீரங்கள் படும் துன்பத்தைக்

கண்டு அதற்கு வேண்டிய உணவையும் அளித்து வருகின்ற அல்லா ஹுதஆலா ஹிருதயமென்னும் பூமியின் தாக விடாயை அகற்று வதற்காக வேண்டுவனவற்றை வைத்திருக்கமாட்டானா? ஹிரு தயத்தின் பசியைப் போக்குவதற்கு வேண்டிய நன் கொடைகள் அல்லாஹுதஆலாவின் பொக்கிஷத்தில் இல்லாதிருக்க முடியுமா?

பூமியின் வரட்சியைக் கண்டு சம்மதிக்காத அல்லாஹுத ஆலா வின் இரக்கமும், பசுமையான இலை, சிவந்த புஷ்பம் ஆகியவை களின் மூலமாயுள்ள அழகை விருக்ஷங்களின் கிளைகள் இழந்து நிற் பதை நோக்கிச் சகிக்காத அல்லாஹுதஆலாவின் பிரீதியும் மனிதர் களின் ஆத்மாக்கள் அழிந்து நாசமாக இஷ்டப்படுமா? மனிதர் களின் தேகம் மரணமடைந்து விடாது வேண்டிய உணவை யளித்து காப்பாற்றும் பெரிய ரக்ஷகனாகிய அல்லாஹுதஆலா உங்கள் ஹிரு தயம் இருளில் சிக்குண்டு கெட்டுப்போகாமல் காப்பாற்றும் பொருட்டு நல்ல வழியைக் காட்டாதிருப்பானா?

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோக்கி உங்கள் ஆண்டவன் யார் என்று "பிர் அவுன்" கேட்டபோது, ஹஜரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்களின் ஆண்டவனை மட்டும் அறிவிக் காமல் அவனுடைய ரக்ஷிப்பை நிரூபிக்கத்தக்க அத்தாக்ஷிகளையும், இயற்கையான நிகழ்ச்சிகளையும் சில வார்த்தைகளின் மூலமாய் எடுத் தோதினார்கள். அஃதாவது:— "எங்களின் ஆண்டவன் எங்களைப் படைத்து ரக்ஷிப்பவனாக இருக்கின்றான். ஆதலின் அவன் ரக்ஷிப் பானது அவனால் படைக்கப்பட்ட ஒவ்வொரு வஸ்துவுக்கும், அதை படைத்ததற்கான அவசியத்தையும் லக்ஷியத்தையும் அறிவித்து, பிறகு அவைகள் இயற்கை சட்டங்களுக்கு உட்பட்டு ஒழுங்கான வழிச் சென்று அவை தாம் படைக்கப்பட்டதின் கருத்தை யுணர் வதற்கு வேண்டிய நேர்வழியைக் காட்டியவனாகும்." என்பதே. (அல் குர் ஆனின் வியாக்கியானம்).

அல்லாஹுதஆலா பூமியின் மண்ணுக்குள் கோடானுகோடி வஸ்துக்கள் உற்பத்தியாகத் தக்கசக்தியை வைத்து பிறகு மழையின் மூலமாய் அது நடந்துகொள்ள வேண்டிய நல்வழியைக் காட்டியிருக் கின்றான். அஃதாவது அச்சக்தி நடந்துகொள்ளவேண்டிய வேலைத் திட்டத்தை யொட்டிய வழியைத் திறந்து விட்டான். ஆகவே அல்லா ஹுத ஆலாவின் ரக்ஷிப்பு, உலகத்தின் ஒவ்வொரு அணுவும், படைக் கப் படுவதற்கு வேண்டிய சாதனங்களையும், பிறகு அவை ஒழுங் கான வழியில் செல்லவேண்டிய சாதனங்களையும் அளித்திருப்ப

தைப் போல் மனிதனை தேகம், உயிர் ஆகிய இரண்டைக் கொண்டும் படைத்து, மனிதன் படைக்கப்படுவதற்கும், நேரான்வழிச் செல்வதற்கும் வேண்டிய எல்லாவற்றையும் படைத்திருக்கின்றான்.

அல்லாஹுதஆலாவின் ரக்ஷிப்பானது சரீரங்களுக்கு வேண்டிய பொக்கிஷங்களைப் பூமிக்குள் மறைத்துவைத்திருப்பதுபோல் அச்சரீரங்களைச் சார்ந்த ஆத்மாக்களுக்குவேண்டிய உணவை யளிக்கவும் சந்தேகமின்றி சக்தியுள்ளதாக விருக்கின்றது. தேகத்திற்குவேண்டிய உணவு, பூமியின் ஜீவுப்பு ஆகியவைகளை முன்னிட்டு மேகம் புரள்வது இடி இடிப்பது, மின்னல் மின்னுவது, மழைபெய்வது ஆகியவைகள் அவசியமாக இருப்பதுபோல், ஆத்மா ஹிருதயம் ஆகியவைகளை பொட்டிய உலகத்திற்கு வேண்டியவைகளெல்லாம் நிகழ்கின்றன. இங்கு பூமி தண்ணீரைக்கோறி பரிதபிப்பதைப்போல் அங்கு மானுஷீகத்தன்மை தனக்குவேண்டிய நேரான வழியைக் கோறி அவஸ்தைப் படுகின்றது. இங்கு ஜலமின்றி இலைகள் உதிர்ந்தும், கிளைகள் காய்ந்தும், புஷ்பங்கள் வர்ணமற்றும் போக ஆரம்பித்தபோது மழைபெய்ய வேண்டுமென்று உலகோர் கோறி நிற்பதைப்போல் அங்கு நன்மையின் பூமிவறண்டு உண்மையின் செடி புஷ்பம் ஆகியவைகள் காய்ந்து நியாயத்தின் வானம் பாழாகி உலகத்தின் நானுபக்கங்களிலும் அல்லாஹுதஆலாவின் சத்திய மென்னும் பரிசுத்தமான விருக்ஷம் க்ஷீணித்துப் போக வாரம்பித்ததும் மனுக்களின் ஆத்மாக்கள் அல்லாஹுதஆலாவின் தயவு, இரக்கம், கிருபை ஆகியவைகளைக் கூவியழைக்கின்றது. பூமியை மரணம் தொடும்போது அதற்கு அல்லாஹுதஆலா மழையின் மூலமாய் ஜீவனை அளிப்பதுபோல், ஆத்மாக்களுக்கு நாசகால மேற்பட்டபோது அல்லாஹுதஆலா அவைகளுக்கு நேரான வழியை யளித்து ஆத்மாக்களைக் காப்பாற்றுகிறான். (தொடரும்)

---

# மௌலூதெநபவீ.

(270 வது பக்கத் தொடர்)

**(இமாமுல் ஹிந்து மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் எழுதியது)**

மௌலூத் ஷரீபை யொட்டிய கூட்டத்தினால் ஏற்படக்கூடிய பயனை நாம் அறிந்தவர்களாயின் இக்கூட்டம் மார்க்க சம்மந்தமான ஓர் அரிய கூட்டமென்றே கூறுவோமென்பது திண்ணம். ஆனால் கீர்த்திவாய்ந்த இக்கூட்டத்திற் கவசியமான ஜீவன் பறிக்கப்பட்டு

உருவம் மட்டுமே யிருந்து வருகிறது. நன்மையைப் பற்றினயோ சனையின்றி வழக்கத்தை யனுசரித்து மட்டும் நடந்து வருகிற ஏனைய கூட்டங்களைப் போலவே, மௌலூத் ஷரீபின் கூட்டங்களும் ஒரு சாதாரண சடங்காகமட்டும் நடந்து வருவது அவசியமெனக் கொண்டு விட்டனர். அன்றியும் பணம் படைத்தவர்கள் தங்களின் பணப் பெருக்கை வெளியிடுவதற்கான காரியங்களுள் மௌலூத் ஷரீபை யொட்டிய கூட்டத்தையும் சேர்த்துக்கொண்டனர்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜனன மான போது நிகழ்ந்த உண்மையான செய்திகளையும், இவர்களின் ஜனனத்தால் கீழ்நாடு, மேல்நாடு ஆகியவைகளில் ஏற்பட்ட பெரும் மாறுதல்களையும் எடுத்தோதி ஜனங்களின் நல்லறிவைப் பெருக்கு வதற்குப்பதிலாக போதிய ஆதாரமில்லாத கட்டுரைகளை வாசிப் பதே போதுமெனக் கருதி இஸ்லாமின் பெரியதொரு லக்ஷியத்தைப் பாழ்பண்ணப் பட்டிருக்கின்றது. விசனம் நிறைந்த இச்செய்கையில் ஈடுபடும் கல்வி வாசனையற்ற பொது மக்களை குறை கூறுவதற்கில்லை. ஆதாரமற்ற இவ்விஷயங்களை வாசித்தும், வாசிக்கச் செய்தும், மௌனவிரதம் பூண்டு செவியுற்றுவரும் உலமாக்கள், "ஹதீது" "சியர்" ஆகியவைகளில் தங்களுக்குப் பெரும் ஆராய்ச்சி யிருப்ப தாகச் சொல்லிக் கொள்ளும் ஸ்திதியில் இவ்விஷயத்தின் உண்மை யைக் கண்டறிய வேண்டுமென்ற எண்ணம் இவர்களின் ஹிரு தயத்துள் ஜனிக்காமலிருப்பதைப் பார்க்க ஆச்சரியமாக விருக் கின்றது.

மௌலூத் ஷரீபை யொட்டிய கூட்டங்களைக் கூட்டுவது, "சுன்னத்து" என்றும், "பித் அத்து" என்றும் செய்யப்பட்டு வந்த விவாதங்களை விட்டு அதற்குப் பதிலாய் இக்கூட்டம் நன்மை பயக் கும் முறையில் நடந்துவர முயற்சித்திருந்தால் உத்தமமாக விருந் திருக்கு மல்லவா? ஜனங்களால் நடத்தப்பட்டுவரும் அன்பு நிறைந்த காரியங்கள் ஒவ்வொன்றும் உண்மையில் ஓர் பெரிய சக்தியாகும். ஆகவே இச்சக்தியைக் கெடுப்பதற்குப் பதிலாக இதன் மூலமாய்ப் பயன் ஏற்பட முயலவேண்டும். எக்காரிய மாயினும் மார்க்கத்திற்கு முரண்பட்டதாயும், சீர்திருத்த முடியாததாயும் இருப்பின் அதை யொழிப்பதற்கு முயலுவது நல்லனவற்றை யேவுவதைச் சார்ந்த கடமையாகும்.

ஓர் ஆலிம் சாஹிப் தங்களுக்கு விடையளித் திருப்பதாய் தங்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சில வாக்கியங்கள் அதிக ஆச்

சரியத்தை மூட்டுகின்றது. இவ்வாலிம் சாஹிப் தம்மை கல்வி கற்றவரென்றும் நூலாசிரியர் என்றும் கூறிக் கொள்ளுவது பொருத்தமற்றதே. இத்தகையவர்களே மதத்தின் உண்மையை அறியாத நண்பராகும். மத விரோதிகளின் எதிர்ப்பைக் காட்டினும், மதத்தின் இந்நண்பர்கள் புரியும் அக்கிரமம் மதத்திற்குப் பெரும் சங்கடமாக இருக்கின்றது. எச்செய்தியைப் பற்றின உண்மையைத் தாங்கள் தெரிந்து கொள்ளக் கருதினீர்களோ அது நேச்சரியத்து மல்ல, இல்ஹாத்துமல்ல. தாங்கள் வினவியுள்ள விஷயங்களைப் பொறுத்து நிற்கும் ரிவாயத்துகளை ஹதீது, சியர் ஆகியவைகளில் ஆராய்ச்சியுள்ள எவரும் ஒரு நிமிஷத்திற்கேனும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே தாங்கள் எடுத்துக்கொண்ட இம் முயற்சி புகழுக் குரியதே. ஆனால் கல்வி கற்றவரெனக் கூறிக் கொள்ளும் அந்த அறிவில்லாதவர் மதத்தை யொட்டிய பலத்தை வீணே விரயம் செய்து விட்டார். இச்சக்தியை உபயோகிக்க வேண்டிய இடத்தை நம் உலமாக்கள் தெரிந்து கொள்வதே யில்லை.

"இக்காலத்து உலமாக்கள் மதத்தை யொட்டிய வேகமும், கோபமும் நிறைந்தவர்களாய் யிருக்கின்றனர்" என்று கூறிபலர் அழுகின்றனர். ஆனால் யாம் இக் கூற்றையேற்றுக் கொள்ளவில்லை. ஏனெனின் உலமாக்களுக்கிருக்க வேண்டிய மத சம்மந்தமான வேகம், கோபம், அஞ்சாமை ஆகியவைகள் போதியவளவு இல்லாததற்காக நான் வருந்தியவனாக இருக்கின்றேன். நல்லனவற்றை யேவவேண்டிய சந்தர்ப்பத்தில் உலமாக்கள் வேண்டுமென்றே அக்கடமையைச் செய்யாமலும், தீயனவகளை யகற்ற வேண்டிய கடமையைச் செய்ய இஷ்டப்படாமல் அலக்ஷியமாக விருப்பதையும் எத்துணையோ துறைகளில் பார்த்தவண்ணமாக இருக்கின்றேன். ஆனால் சிற்சில சிறியவிஷயங்களுக்காக இவ்வுலமாக்கள் பெரும் கோபம் கொள்ளுகின்றனர். இவ்வுலமாக்கள் கொள்ளும் கோபம் அனேகமாய் உபயோக மற்றதாயும், வீணானதாயுமிருக்கின்றது. அன்றியும் பற்பல சந்தர்ப்பங்களில் இவர்கள் காட்டும் கோபம் கெடுதியை விளைவிப்பதாகவு மிருக்கின்றது.

ஒவ்வொரு சக்தியையும் அதை உபயோகிக்க வேண்டிய இடத்தில் உபயோகிக்கக் கற்றுக் கொள்ளுவது முக்கியமான காரியங்களுள் ஒன்றாகும். நீராவியின் மூலமாய் சமுத்திரத்தில் கப்பலையும், தரையில் ரயிலையும் ஓடச்செய்யலாம். தொழிற்சாலைகளில் இயந்திரங்களை நடத்தி வைக்கலாம். ஆனால் இந் நீராவியை சாக்குகளில் கட்டி

பறக்கவிட முயலுவீர்களாயின், உங்கள் முயற்சியும் நீராவியும் வியர்த்தமாகுமல்லவா ?

இத்துக்க கரமான வரலாற்றை வெளியிடும் நேரம் இஃதல்ல. இஃதை எழுதப்புகின் ஒரு விரிவான சரித்திரமாக முடியும், நம் போர்வையின் எப்பாகமும் துரதிருஷ்டமென்னும் வடுக்களை விட்டுத் தப்பிக் கொள்ளவில்லை. ஆகவே எங்தெந்த வரலாற்றை வெளியிட முடியும் ? எதெதை முன்னிட்டு அழக்கூடும் ? இத்துணைக்கும் அவகாசமேது ?

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஜனனமான போது நிகழ்ந்ததாகக் கூறப்படும் அற்புதங்களை யொட்டிய ரிவாயத்துக்களை ஏற்றுக்கொள்ளவோ அல்லது தள்ளவோ தாங்கள் கொண்டிருக்கும் வழியை மிகப்பெரும் விசனத்தோடு மறுக்கிறேன். (நீங்கள் பின்பற்றியிருக்கும் வழியானது) நாகரீகம் முதிர்ந்த இந்நாளில் அறிவு, கல்வி, ஆராய்ச்சி முதலியவைகளில் தேர்ந்தவர்களென்றும், மார்க்கத்தைப் பகுத்தறிவுக் கேற்றவாறு திருத்தியமைக்கத்தக்க ஆற்றல் படைத்தவர்களென்றும் தங்களைத் தாங்களே அழைத்துக் கொள்ளுவோர் விழுந்துகிடக்கின்ற பெரும் கேட்டிற்கு அடிப்படையான படுகுழியாகும்...

இவ்வற்புதங்களை சஹீஹான ஹதீதுகள் உண்மையெனக் கூறிவிட்டாலும் இவைகளைப் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளுமா வென்று மீண்டும் மீண்டும் வரைந்துள்ளீர்கள். இவ்வற்புதங்கள் சம்மந்தமான ரிவாயத்துகள் உண்மையானவை அல்லவென்றே யானும் கூறுகின்றேன். ஆனால் உங்கள் பகுத்தறிவுக்குப் புலப்படாதவை யெல்லாம் பிசகென்று கொள்ள அனுமதிக்கும் சட்டம் எவ்வமயம் நிறைவேறிற்றோ ?

ஹதீதுகளை யொட்டி பாகுபாடு செய்யவேண்டிய ஒழுங்கிற்கேற்ப இவ்வற்புதங்கள் உண்மைதானா ? இவைகள் ஒப்புக்கொள்ளத் தக்கனவா? வென்று மட்டும் தாங்கள் தவக்கமின்றி கேட்கலாம். இது உங்கள் சந்தேகத்தை தீர்த்துக் கொள்ளப் போதியவார்த்தையாகு மென்பதை நிச்சயமாய்க் கூறுகின்றேன்.

ஒரு விஷயத்தைப் போய் அல்லது மெய் என்று கண்டு பிடிப்பதற்காக ஆராய்ச்சி செய்யவேண்டுமோயின், அவ்விஷயத்தை உங்கள் பகுத்தறிவு ஏற்றுக் கொள்வதே முதல் நிபந்தனை என்னும் சட்டம் எங்கே வரையப்பட்டிருக்கிறதோ தெரியவில்லை. "பகுத்தறிவு ஏற்றுக் கொள்ளுமா ?" என்னும்வார்த்தையை இந்நாளில் உங்கள்

கோஷ்டியார் தவக்கமின்றி உபயோகித்து விடுகின்றனர். ஆனால் நீங்கள் சென்று கொண்டிருக்கும் வழி எத்தனை அபாயகரமானது என்பதை நீங்கள் சிந்திக்கவில்லை. ஒவ்வொரு விஷயமும் உண்மையா அல்லது உண்மைக்கு மாறானதா என்று தீர்மானிப்பதற்கு அது சம்மந்தமான சாக்ஷியம், ஆதாரம் ஆகியவைகள் சேகரமாக வேண்டுமென்பதே யொழிய "ஜைத்" அல்லது "பக்ர்" உடைய பகுத்தறிவு ஏற்றுக் கொள்ளவேண்டு மென்பதல்ல.

ஆகாயத்தந்தி சம்பந்தமான கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாய் மேல்நாட்டு உயர்தரமான பத்திரிகைகள் கூறியபோது (அத்தந்திக் கருவிகளை நீங்கள் நேரில் காணும்வரை) அச்செய்தியை உங்கள் பகுத்தறிவு ஏற்றுக்கொண்டதா அல்லது மறுத்துவிட்டதா? என வினவுகிறேன்.

எதையும் உண்மையா அல்லது உண்மைக்கு மாறானதாவென்று கண்டு பிடிக்கவேண்டு மென்னும் உங்கள் லக்ஷியமே என் லக்ஷியமுமாக விருந்தும் மார்க்கத்தை பகுத்தறிவுக் கேற்றவாறு திருத்தி யமைக்க வேண்டுமென்று கூறும் நுங்களைப்போன்ற திருத்தக்காரர்களை விட்டு யான் இச்சந்தர்ப்பத்தில் ஒதுங்கிக்கொள்ள வேண்டியதாக விருக்கின்றது. இச்சீர்திருத்தக் காரர்கள் தாங்களாகவே தயாரித்துக் கொண்டிருக்கும் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளாத எந்த ஹதீதுஷரீபையும், ரிவாயத்தையும் மறுத்தவிட உடனே அடக்கமற்றவர்களாய் முற்பட்டு விடுகின்றனர். அன்றியும் இவர்கள் தங்களின் அட்டூழியத்தை (பகுத்தறிவுக் கேற்றவாறு மார்க்கத்தைத் திருத்தியமைக்கும்) அரிய ஊழிய மென்றும் கூறிக்கொள்ளுகின்றனர். ஆனால் இவர்கள் பஹிரங்கமாய் பரிகசிக்கப் படுவதை யோட்டி வெட்கப் படுவதாகத் தெரியவில்லை.

இந்நாகரீகக் கோஷ்டியாருக்கு மார்க்கக்கல்வி கற்க அவகாசமேற்பட்டிருப்பின், அல்லது மார்க்க சம்மந்தமான கிரந்தங்களை வாசிக்கப் போதிய சக்தி இருப்பின் இவர்கள் கொண்டுள்ள லக்ஷியத்தை நேரானவழிச் சென்று அடையக் கூடுமென்பதை அறிந்து கொள்ளுவர்.

எந்தஹதீதையும் உண்மையா அல்லது உண்மைக்கு மாறானதாவென்று ஆராய்ச்சி செய்து ஒழுங்கான தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய சாதனங்க ளத்தனையும் நம்மிடமிருந்து வரும் ஸ்திதியில் பகுத்தறிவு ஏற்றுகொள்ள வில்லையேன்று கூறி ஒரு சிறிய ரிவாயத்தையாவது மறுப்பதற் கென்ன நியாய முண்டு?

எம்முடைய வேண்டுகோளைத் தாங்கள் தெரிந்துகொள்ளவில்லை யென்றுவது, தெரிந்து கொண்டீர்களென்றுவது யானறியக் கூட வில்லை. நீங்கள் மறுக்கும் விஷயங்களை ஒருசமயம் யாமும் மறுக்க வேண்டியதாக இருக்கலாம். ஆனால் தாங்கள் மறுப்பதற்கும் யான் மறுப்பதற்கு மிடையில் வானம் பூமிக்குள்ள வித்தியாச மிருக்கிறது. உங்கள் பகுத்தறிவு ஏற்றுக்கொள்ளாததை நீங்கள் மறுப்பவர்களாக விருக்கின்றீர்கள். ஆனால் உண்மையான ஹதீதுகள் ஏற்றுக்கொள் ளாதவைகளை யான் மறுக்கவேண்டியவனுக இருந்து வருகின்றேன். தாங்கள் மறுப்பதைத்தானே நாங்கள் மறுக்கிறோ மென்றும் நீங் கள் கூறலாம். ஆனால் நீங்கள் செல்லும் வழியிலும், நான் செல்லும் வழியிலும் விசேஷ வித்தியாசங்களுண்டு.

பகுத்தறிவுக் கேற்றவாறு மார்க்கத்தைத் திருத்தி யமைப்பதற் காக முன் வந்திருக்கும் கோஷ்டியார் கூறும் வார்த்தைகளுள் பல வற்றை இமாம் "கஜ்ஜாலீ" ஷாஹ்வலியுல்லாஹ்," கத்தஸல் லாஹு ஸிர்ரஹுமா ஆகிய இருவர்களும் கூறியிருக்கின்றனர். ஆனல் இவ்விரண்டிற்கும் இடையிலுங்கூட வானம் பூமிக்குள்ள வித்தியாசமிருந்து வருகின்றது: ஒன்றின் மூலமாய் நாஸ்திகக் கொள்கையும், மற்றொன்றின் மூலமாய் மார்க்கத்திற்குப் பலமும் ஏற் பட்டுவருகின்றது.

"உலமாக்கள் முக்கியமான விஷயங்களைக் கவனிப்பதில்லை" யென்று நீங்கள் கூறுவது உண்மையே. ஆனல் உலமாக்கள் கவ னிப்பதற்கு நீங்கள் என்ன சாதனங்களைச் செய்து வைத்திருக்கிறீர் கள் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள். பகுத்தறிவுக் கேற்றவாறு மார்க்கத்தைத் திருத்தி யமைப்பதாய்க் கூறிக்கொண்டு நீங்கள் புரி யும் காரியம் கூர்மையான கத்திரியாக விருக்கின்றது. உங்கள் கையில் அகப்பட்டவைகளை யெல்லாம் இக்கத்திரியின் மூலமாய் கத்தரித்து நாசமாக்க ஆரம்பித்து விடுகின்றீர்கள்.

உங்களிடத்தில் மதக்கல்வி கிடையாது. மத சம்மந்தமான சட்டதிட்டங்களில் ஆராய்ச்சியுமில்லை. மதத்தை யொட்டிய கிரந் தங்களில் உங்கள் பார்வை விழுவதில்லை. எந்த பாஷையைவிட்டு குர் ஆன் ஷரீபையும் ஹதீதையும் பிரிக்கமுடியாதோ, அந்த பாஷையை நீங்கள் தெரிந்துகொண்டது மில்லை. இந் நிலைமையில் உங்களை உல மாக்கள் எவ்வாறு மதிக்கமுடியும்?

உங்களை உலமாக்கள் கவனியாது ஒதுக்கித் தள்ளியிருப்பதைப் பெரும் குற்றமென்றே கருதுகின்றேன். அதற்கு வேண்டிய ஆதாரங்

தனை யெடுத்துக் காட்டும் சந்தர்ப்பம் இதுவல்ல. ஆனால் உலமாக்கள் உங்களை யலக்ஷியம் செய்திருப்பதற்கு மேற் கூறியவைகளைக் காரண மாக எடுத்துக் காட்டுவார்களாயின், இதற்கு விடையளிக்க உங்களி டம் என்ன சாதன மிருக்கிறது ?

"ஷைக் முஹம்மத் அப்துஹு" அவர்களும், இவர்களைப் பின் பற்றிய ஸையித்ரஷீத்ரஸா அவர்களும் சீர்திருத்தக்காரர்களே. இவர்களை நான் சதாபுகழ்கின்றேன். ஆனால் பகுத்தறிவுக் கேற்ற வாறு மார்க்கத்தைத் திருத்தி யமைக்க இந்தியாவில் புதிதாய்த் தோன்றி யிருப்பவர்களை நான் சிலாகிப்பதில்லை. ஏனெனில்? இச்சீர் திருத்தக் காரர்களைக் காட்டினும் "ஷைக்முஹம்மத் அப்துஹு" முதலியவர்கள் உண்மையை நன்குணர்ந்திருக்கின்றார்கள்.

இதோ உங்கள் வினாக்களுக்கு விடையைப் பெற்றுக்கொள்ளுங் கள். உங்கள் பகுத்தறிவையும், பிலாஸபியின் ஸக்தியையும் கஷ் டப் படுத்தவேண்டிய அவசியமில்லை. நாயகம் ஸல்லல்லாஹு அலை ஹிவஸல்லம் அவர்கள் ஜனனமானபோது நிகழ்ந்ததாகக் கூறப்படும் அற்புதங்களை யொட்டிய ரிவாயத்துகள் முதலெடுப்பிலேயே ஆதார மற்ற கிஸ்ஸாக்களைச் சார்ந்ததாக விருக்கின்றன. இவைகள் எந்த உண்மையான ஹதீது ஷரீபின் கிரந்தங்களிலும் வரையப்பட்டிருக்க வில்லை. இது சம்மந்தமாயும் விரித்துக்கூற சௌகரியமில்லை. ஆத லின் சிற்சில வார்த்தைகளை மட்டும் வெளியிடுகின்றேன்.

அங்கீகரிக்கத் தகாதனவாயும் ஆதாரமற்றனவாயும், இருப்பவை களையே இன்று முஸ்லிம்களுள் படித்துள்ளவர்களும், மற்றவர்களும் அதிகமாக ஏற்றுக் கொண்டாடுகின்றனர். இது நம் எத்தகைய ஊழ்வினையாகும். இட்டுக் கட்டிய கட்டுறைகள் பொய்யான கதை கள் நிறம்பிக்கிடக்கும் கிரந்தங்களே இன்று சரித்திரத்தில் பிரசித்தி பெற்றனவாயும், ஒப்புக்கொள்ளத் தக்கனவாயும் இருந்துவருகின்றன. முஹத்தி தீன்களை ஆசிரியர்களாய்க் கொண்ட உயர்தரமான கிரந் தங்களுக்குப் பதிலாய் கதை சொல்லுகிறவர்களையும் உபதேசம் செய்கிறவர்களையும் ஆசிரியர்களாய்க் கொண்ட கிரந்தங்களே "சியர்" அல்லது "சீரா" சம்மந்தமான கிரந்தங்களுள் புகழுக்குரியதாக விருக்கின்றன. "முதகத்திமீன்கள்" என்னும் முன்னோர்களால் இயற்றப்பட்டுள்ள கிரந்தங்களை நோட்டமிடுவதை விட்டு எல்லாத் துறைகளிலும் சில பின்னோர்களியற்றிய கிரந்தங்களையே வாசித்து உண்மையெனக் கொள்ள வாரம்பித்துவிட்டனர். இதுவே நம் கேட் டிற்குப் பெரும் மூலமாகவிருந்து வருகிறது. இப்பின்னோர்கள் "இர

வில் விறகு பொறுக்குவோர்,'' என்னும் நாமத்திற் குறியவராகும். இவர்கள் சில ஆதாரமற்ற கிரந்தங்களில் வரையப்பட்டிருக்கும் உண்மையல்லாத ரிவாயத்துக்களைச் சேகரித்துக் கோர்வை யாக்கிவிட்டனர்.

மதத்தை யொட்டியதாகப் பகரும் ஆதாரமற்ற கிஸ்ஸாக்களின் மூலமாய் சபையில் பெரும் உற்சாகத்தையும், ஒருவித உணர்ச்சியையும் உண்டுபண்ணி விடுகிறவர்களையே நான் கதை சொல்லுகிறவர்களென்றும், உபதேசம் செய்கிறவர்களென்றும் கூறுகின்றேன். இவர்கள் ஆரம்பகால முதற்கொண்டே ஏற்கத்தகாதவைகள், ஆதாரமற்றவைகள், கட்டுறைகள் இட்டுக்கட்டிய கதைகள் ஆகியவைகளை அடிப்படையாய்க் கொண்ட தங்களுபதேசங்களின் மூலமாய் ஜனங்களைக் கவரச்செய்ய வேண்டியவர்களாக விருந்தனர். ஆதலின் இவர்கள் அழகிய கிஸ்ஸாக்களைத் தேடியெடுக்க வேண்டியதாக இருந்ததோடு கிட்டாதவைகளை இவர்கள் தயக்கமன்னியில் கற்பனை செய்துகொள்ளவும் பின் வாங்கவில்லை.

தங்கள் கையால் செய்துவிட்டு பிறகு ''இது அல்லாஹு த ஆலாவின் செயல்'' என்று கூறுகின்றவர்களைப்போல் இவர்களுடைய நடவடிக்கையு மிருந்துவந்தது. இவ்வகுப்பார் இத்தகைய எல்லா ரிவாயத்துகளையும் இவர்களின் சாதுரியமான சக்தியின் மூலமாய்க் கோர்த்து இஷ்டப்படி வியாக்கியானம் செய்து விரிவுரைகளைக் கொண்டு சபைகளில் வெளியிட்டு வந்தார்கள். காலம் செல்லச் செல்ல இது தொத்து வியாதியைப்போல் பரவியது.

ஈரான் தேசத்தைச் சேர்ந்த பின்னோர்களில் குறிப்பிட்ட சிலர் உபதேசம் செய்வதை ஒரு ஸ்திரமான தொழிலைப்போல் ஏற்படுத்தி விட்டனர். இவர்கள் நல்ல சக்தியுள்ளவர்களாயும் நூலாசிரியர்களாயுமிருந்ததால் இவர்கள் புரியும் உபதேசங்களையும் இவர்கள் அறிவிக்கும் கிஸ்ஸாக்களையும், கிரந்தங்களாயும் சியர்களாயும் அமைத்துவிட்டனர். மற்றவர்கள் ஒருவர்பின் ஒருவராய் இக்கேட்டைப் பின்பற்ற ஆரம்பித்துமிட்டனர்.

(உதாரணமாக ''முல்லாஹுஸைன்,'' ''வாயிலெ காஷிபீ,'' ''முல்லா முயீனுத்தீன் ஹரவீ'' ஆகியவர்களை எடுத்துக் கொள்ளலாம்.)

கிரந்தங்களையும் கிஸ்ஸாக்களையும் இயற்றுவது, ஆதாரமற்றதும் ஒதுக்கப்பட்டதுமான ரிவாயத்துகளிலிருந்து விஷயங்களை எடுத்துக் கோர்ப்பது, குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் நளினமான

தாவீல்களைச் செய்வது, யூதர்களின் ரிவாயத்துகளிலும் இஸ்ராயீலிய்யாத்துகளிலும் ஆராய்ச்சிசெய்து வேண்டியவைகளை சேகரிப்பது ஆகியவைகளில் "முல்லாமுயீனுத்தீன் ஹரவீ" அவர்கள் நிகரற்றவர்களாக இருந்தார்கள்.

உர்து பாஷையில் இன்று வரையப்பட்டிருப்பதும், பரவியிருப்பதுமான (மௌலூத் ஷரீபை யொட்டிய) கிரந்தங்கள் அநேகமாய் முல்லா முயீனுத்தீன் ஹரவீ அவர்களியற்றிய "மஆரிஜுன்னுபுவ்வா," "நக்ரயெகார்," "இஹ்ஜாஸெமூஸவீ" முதலிய கிரந்தங்களை நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ பின்பற்றியதாகவே இருக்கின்றன. ஆனால் இதன் உண்மையைப் பலர் அறியாதிருக்கக்கூடும். இக்கிரந்தங்களுள் வாசிக்கத்தக்க நல்ல விஷயங்கள் இருந்துவருகின்றன வென்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஆதாரமற்றவைகளை அடிப்படையாய்க் கொண்ட கிரந்தங்களை வைத்துக்கொண்டு என்செய்வது?

மேற் கூறப்பட்டுள்ள கிரந்தங்களில் வரையப்பட்டிருப்பவைகள் அநேகமாய் இதன் ஆசிரியர்களின் கற்பனையுமல்ல. ஆனால் இவ்வாசிரியர்கள் தங்களின் முன்னோர்களைப் பின்பற்றி உபதேசம் செய்யும் சபைகளுக்கென்றே பார்ஸீ பாஷையில் வரைந்து பிரசுரித்து விட்டனர். இவை ஈரானிலும் இந்தியாவிலும் பரவிவிட்டது. இட்டுக்கட்டிய கிஸ்ஸாக்கள், பொதுமக்களும் பாமரர்களும் விரும்பும் உணவாதலின் தவக்கமின்றி இவை ஜனங்களின் பிரீதியைப் பெற்றுக் கொண்டன.

தாங்கள் வினவியுள்ளவைகளைப் பொறுத்து நிற்கும் ஹதீதுகளில் எதையும் (உண்மையான ஹதீதென்று) ஏற்றுக்கொள்ளத்தக்க ரிவாயத்தின் மூலமாய் அங்கீகரிக்கக் கூடவில்லை. "ஸிஹாஹ் ஸித்தா" வென்னும் உண்மையான ஹதீது ஷரீபின் 6-கிரந்தங்களிலும், பிரசித்திபெற்ற மற்ற கிரந்தங்களிலும் தங்களின் வினாவில் அடங்கியுள்ள அற்புதங்களை யொட்டிய செய்திகள் வரையப்பட்டிருக்கவில்லை. போதிய ஆதாரமுள்ளது, இல்லாதது என்னும் வித்தியாசமின்றி எல்லா ஹதீதுகளையும், "ஜம்உல் ஜவாமிஃ" என்னும் கிரந்தத்தில் சேகரித்து வரைந்திருப்பதாய், "ஹாபில் சுயூத்தீரஹ்மத்துல்லாஹி அலைஹி" அவர்கள் கூறியுள்ளார்கள். ஆனால் தங்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அற்புதங்கள் எந்த கிரந்தத்திலும் வரையப்பட்டிருக்கவில்லை. (இது ஆச்சரியமல்லவா?)

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஜனன மானபோது நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் அற்புதங்கள் உண்மையானதாக இருப்பின் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனனம், நபித்துவம், சொல், செயல் முதலியவைகளைப் பற்றித் தனித்தனியே பல அத்தியாயங்களாகவுள்ள "கன்சுல் உம்மால்" என்னும் கிரந்தத்தில் அவசியம் வரையப்பட்டிருக்கும். ஆனால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஜனன மானதை யொட்டிய வரலாறு இக்கிரந்தத்தில் வெகு சுருக்கமாகவே வரையப்பட்டிருக்கிறது. இதில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜனனமான தேதியும் வேறு சில குறிப்புகள் மட்டுமே வரையப்பட்டிருக்கின்றன. தாங்கள் வினவியுள்ள அற்புதங்கள் இக்கிரந்தத்திலும் வரையப்பட்டிருக்கக் காணேம்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனனத்தைப்பற்றின அற்புதங்களுள் நாயகம் அவர்கள் "கத்னு" செய்யப்பட்டவர்களாய் ஜனனமானார்கள் என்று 3, 4 ரிவாயத்துகள் பகருகின்றன. ஆனால் இந்த ரிவாயத்துகளும் "இப்னு அசாக்கிர்" என்பவர்களால் அறிவிக்கப்பட்டவையாக யிருக்கின்றன. ஆதாரமுள்ளது இல்லாதது முதலிய எல்லா ஹதீதுகளையும் வித்தியாசமின்றி அறிவிக்கிறவர்களென முஹத்தி தீன்கள் இப்னு அசாக்கிர் அவர்கள் மீது குறை கூறி இருக்கின்றனர். அன்றியும் இந்த ஹதீதுகளை ஹஜ்ரத் இப்னு அப்பாஸ்ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்ததாகமட்டும் வரையப்பட்டிருக்கின்றது. ஆகவே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனனத்தை யொட்டிய மற்ற ரிவாயத்துகள் தொடர்ச்சியற்றதாக விருப்பதுபோல் இந்த ரிவாயத்துகளும் தொடர்ச்சியற்றதாகவே யிருக்கின்றன.

(தொடரும்.)

---

# இஸ்லாமும் சுயேச்சையும்.

## இஸ்லாமிய ராஜீய முறையில் சமத்துவம்

**(இமாமுல் ஹிந்து மௌலானு அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் எழுதியது),**

ஒரு "ஸஹாபி" தன் வேலைக்காரரை அடித்துக்கொண்டிருந்தபோழ்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஸஹாபியை நோக்கி "இவ்வேலைக்காரர் தங்களின் சகோதரராகும். இவரை அல்லாஹுத ஆலா தங்களிடம் ஒப்புவித்திருக்கிருன். தாங்

கள் உண்பதைப் போலவே இவருக்கும் உண்ணக் கொடுங்கள். தாங்கள் உடுப்பதைப் போலவே இவருக்கும் உடுக்கக்கொடுங்கள்" என்றறிவித்தார்கள். ஒருவன் மற்றொருவனை (அவன் எத்துணை கீழ்பட்டவனாயினும்) அடிமை என்றழைக்கக் கூடாதென்று இஸ்லாம் வெகு கண்டிப்பாய் எச்சரிக்கின்றது.

உயர்ந்தவர், தாழ்ந்தவர் முதலிய எல்லோரும் அல்லாஹுத ஆலாவுக்கு மட்டும் அடிமைகளாக விருக்கின்றனர். ஆதலின் மனிதர்களை மனிதனே அடிமையாக்கிக் கொள்ள இஸ்லாம் இடந்தரவில்லை. இஸ்லாம் ஏற்படுத்தியிருக்கும் சமத்துவத்திற்குப் பங்கமேற்படாதிருக்கும் பொருட்டு வேலையாட்கள் தங்கள் முதலாளியை எஜமானனென்றழைக்கக் கூடா தென்றும் இஸ்லாம் தடுக்கின்றது. ஒரு சமயம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஒரு சஹாபி "எஜமானர்களே" என்று கூறினார்கள். உடனே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "என்னை எஜமானனென்று கூறவேண்டாம். எஜமானன் ஒருவனே அவன் அல்லாஹுத ஆலாவாகும்," என்று அறிவித்தார்கள்.

இஸ்லாமிய அறிவென்னும் ஜீவனைக் கொண்டிருந்த உருவங்களாகிய "குலபா யெராஷி தீன்களும்" மேற் கூறிய வண்ணம் சதா சமத்துவத்தைக் கடைபிடித் தொழுகிவந்தார்கள்.

ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களின் வேலைக் காரரோடு "பைத்துல் முகத்தஸை நோக்கி புறப்பட்ட போது இவர்களிடம் ஓர் ஒட்டகமேயிருந்தது. இதில் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கொஞ்ச தூரமும் வேலைக்காரர் கொஞ்ச தூரமுமாக மாற்றி மாற்றி ஏறிச் சென்றார்கள். பைத்துல் முகத்தஸை அடையும் வேளை ஒட்டகையின்மேல் வேலைக்காரர் ஏறிக்கொள்ளும் முறையாக இருந்தது. ஆகவே வேலைக்காரர் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப்பார்த்து "ஊர் நெருங்கி விட்டதால் தாங்களே ஒட்டகையின் மேல் ஏறிக் கொள்ளுங்கள்" என்று கேட்டுக் கொண்டார். வேலைக்காரரின் வேண்டுகோளை உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இஸ்லாமின் கலீபாவாகிய உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களின் வேலைக்காரர் ஏறியிருந்த ஒட்டகையின் கயிற்றைப் பிடித்தவர்களாய் பைத்துல் முகத்தஸ் என்னும் பட்டினத்துட் பிரவேசித்தார்கள். இஸ்லாமிய கலீபாவின் பெருமை, கீர்த்தி முதலியவைகளைக் கண்டு களிப்பதற்காக வந்த ஜனத்திரள்

கள் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், (வேலைக்காரர் ஏறி யிருந்த) ஒட்டகையின் கயிற்றைப் பிடித்திருப்பதைப் பார்த்து ஆச் சரிய முற்றார்கள். (இது உலக மறிந்த விஷய மாதலால் விரித்துக் கூறவேண்டுவ தில்லை.)

முஸ்லிம் களின் நிலைமையையறிந்து வரும்படி "ரோம்" தே சத்துப் படைத்தலைவனால் அனுப்பப்பட்ட உளவாளி முஸ்லிம்களின் உண்மையான நடவடிக்கை களைப்பார்த்துப்போய் படைத்தலை வனை நோக்கிக் கூறியதாவது :—"முஸ்லிம்கள் இரவுமுழுவதும் வணக்கத்தில் மூழ்கித் தவசிகளைப்போலிருக்கின்றனர். ஆனால் பக லில் வீரர்களாயிருந்து வேலை செய்கின்றனர். இவர்களின் அரச குமாரன் களவு செய்து விடினும் கையைத் தரித்துவிடுவார்கள். அரசகுமாரன் விபசாரம் புரிந்துவிடின் இவனைக்கூட (தாக்ஷண்ய மின்றி) கல்லெறிந்து கொன்று விடுவார்கள்" என்பதே.

"மஹ்ஜூம்" என்னும் வகுப்பைச்சேர்ந்த ஒரு பெண் திருடி விட்டதாக கைது செய்யப்பட்டிருந்தபோழ்து குரைஷிகள் அம்மா தைப் பற்றி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமுகத்தில் சிபார்சு செய்வதற்காக உஸாமாரலியல்லாஹு அன்ஹு அவர்களை முற்படுத்தினார்கள். குரைஷிகளின் வேண்டுகோளுக் கிணங்க உஸாமாரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சிபார்சு செய்தார்கள். அப் பொழுது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜனங் களைக் கூட்டி "ஓ ஜனங்களே! உங்களுக்கு முன் தோன்றினவர்கள் பெரியமனிதர்கள் திருடிவிட்டால் அவர்களை விட்டுவிடுவார்கள். அவர் களுள் சாதாரண மனிதர்கள் திருடிவிட்டபோழ்து அவர்களை மட்டும் சிக்ஷிக்கப் பின்வாங்கமாட்டார்கள். ஆனதுபற்றியே அல்லாஹுத ஆலா அவர்களை நாசமாக்கி விட்டான். ஆனால் அல்லாஹுத ஆலா வின் பேரில் சத்தியமாக முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம் அவர்கள்) உடைய மகள் பாத்திமா (ரலியல்லாஹு அன்ஹா அவர் கள்) திருடிவிடினும் சந்தேகமின்றி அவர்களுடைய கை வெட்டப் படும்" என்று அறிவித்தார்கள்.

(இது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருட்டுக் குற்றத்தைக் குறிப்பிட்டுக் கூறியதின் காரண சந்தர்ப்பத்தை யொட் டியதாகும். ஆனால் எக்குற்றத்தை யொட்டியும் வித்தியாசம் பாராட் டாமலேயே இஸ்லாம் சிக்ஷிக்கக் கூடியதாக இருக்கின்றது.) இதுவே

இஸ்லாமிய உத்திரவின் உண்மையான உருவமாகும். இதுவே உண்மையில் இஸ்லாமிய சமத்துவத்தின் படிப்பினையாகும்.

மேல் நாட்டின் ஏதேச்சாதிகார முறையும், உயர்வு, தாழ்வு என்ற விகாரமான வேற்றுமையும், பிரான்ஸ் தேசத்தில் ஏற்பட்ட மாறுதலுக்குப் பிறகு ஒழிந்துவிட்டதென்று அறிவிக்கப்படுகிறது. ஒருவன் தன் சிரசில் கிரீடத்தையும், கரத்தில் ஆக்ஷியின் பலத்தையும் வைத்துக்கொண்டிருப்பினும், இவனும் மற்றவர்களும் மனிதனென்ற முறையில் சமத்துவமானவர்களென்றே ஐரோப்பா கூறுகின்றது. ஏதேச்சாதிகார ஆக்ஷிமுறை பிரேதமாக்கப்பட்டு விட்டதாயும், சட்ட திட்டங்களுக்குப் பெரும் கௌரவ மேற்பட்டு விட்டதாயும் சமத்துவம், சுயேச்சை ஆகியவைகளின் சப்தம் மேல்நாடு முழுவதிலும் பரவி நிற்பதாயும் வெளியிடப்படுகின்ற இந்நாளில் எந்த அரசனாவது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வெளியிட்டதைப் போன்ற சமத்துவக் கொள்கையின் உண்மையான தத்துவத்தை பஹிரங்கப்படுத்தி அதற்குத் தன்னை உட்படுத்தவும் தயாராக விருப்பானா?

இங்கிலாந்தில் அரசர்கள் சட்டதிட்டங்களுக் குட்பட்டவர்களென்று பறை சாற்றப்படுகின்றது. அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய தேசத்தின் பிரசிடெண்டுகள் சில தினத்திற்கு மட்டும் அரசாங்கத்தை நடத்தி வைக்கும் பொருப்பேற்ற ஒருவித அதிகாரி என்பதைக் காட்டினும் இவர்கள் கீர்த்திவாய்ந்தவர்களல்லவென்று அறிவிக்கப்படுகின்றது. ஆனால் அத்தேசத்து நிகழ்ச்சியை சேகரித்துப் பார்ப்போமாயின், மனிதனை மனிதன் பூஜித்த இருள்டர்ந்த காலத்தில் நிகழ்ந்தது போன்ற தீச்செயல்களும், இந்தியாவில் "மனு" என்றவர்கள் காலத்தில் புரியப்பட்டதைப் போன்ற அக்கிரமச் செய்கைகளும் மலிந்து கிடப்பது வெளியாகும்.

ஒரு சாதாரண பிரஜையின் தாவாவை யொட்டி பதிலிறுப்பதற்காக மேநாட்டின் எந்த அரசனாவது நீதி மண்டபத்திற்கு வந்தானென்று அந்நாட்டார் பகர முடியுமா? மதீனாவின் மஸ்ஜிதையே நீதி மண்டபமாக பாவிக்கப்பட்டிருந்த காலத்தில் மட்டுமின்றி திமிஷ்க், (தமஸ்கஸ்) "பக்தாத்" ஆகிய தேசங்களில் இருந்துவந்த கீர்த்தி வாய்ந்த நீதி மண்டபங்களிலும், அரசர் சாதாரண பிரஜையைப்போல விஜயம் செய்த வரலாற்றை சரித்திரங்களில் பார்த்திருக்கின்றோம். அநியாயகரமான அரசாங்கங்களை அழிப்பதற்காக அரபுதேசத்தில் தோன்றிப் புகழ்பெற்ற அரசராகிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி

வஸல்லமவர்களுடைய விளம்பரத்தில் கண்டுள்ளதைப்போல் மேல் நாட்டின் அரசன் தன் புத்திரியை ஒரு சாதாரண சோல்ஜரின் புத்திரிக்குச் சமமாகவே சிக்ஷிக்கப் பின் வாங்க முடியாதென்று அறிவிக்கத்தக்க சட்டங்களும் மேல் நாட்டிலுண்டா?

சட்டப்படி உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வித்தியாசம் இன்று மேல் நாட்டிலில்லையா? அரசர் நீதி மண்டபத்திற்கு வரமுடியாதென்றும், எவ்வுயர்தர நீதிபதியும் அரசருக்கு ஸம்மன் பிறப்பிக்கக்கூடாதென்றும் சில வருடங்களுக்கு முன் லண்டன் பார்லிமெண்டு வெளியிட்ட அறிக்கையை நாம் மறந்து விட்டோமா? இது ஒரு சாதாரண விளம்பரம் அல்ல. சந்தேகமின்றி இதே அந்நாட்டின் சட்டமாகும். "சமத்துவம்," "சமத்துவம்" என்று பறை சாற்றிக்கொண்டே, அரசர் நீதி மண்டபத்திற்கு வரமுடியாத கௌரவம் வாய்ந்தவர் என்ற சட்டத்தை இங்கிலாந்து ஏன் நிறைவேற்றுகிறதோ?

பல நூற்றாண்டுகளாக நடைபெற்று வந்த பெரும் முயற்சிக்குப் பின் மேல் நாடடைந்த சுயேச்சை இதுவே. ஆனால் "ஈஸவீ" 6-வது நூற்றாண்டின் இருளடர்ந்த காலத்தில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் கரத்தால் ஏற்றிவைக்கப்பட்ட (உண்மையான) சமத்துவத்தின் தீபம் பிரகாசிப்பதை நாம் பார்க்க வேண்டாமா? இஸ்லாமின் பரிசுத்தமான பிரசாரம் எத்தகையதென்பதைச் சிந்திக்க வேண்டாமா? "முஹமத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய மகள் பாத்திமா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் களவு செய்து விடின் அவர்களின் கையும் வெட்டப்படும்" என்பதல்லவா? இஸ்லாமின் விளம்பரம்.

## முதலாவது கலீபாவின் அறிக்கை.

(உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வித்தியாசமில்லாத சமத்துவம்).

ஹஜ்ரத் அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், கிலாபத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு செய்த ஆரம்ப விளம்பரமாவது :—"உங்களுள் பல முள்ளவர்களிடமிருந்து எனக்குச் சேர வேண்டியவைகளை நான் பெற்றுக் கொள்ளும் வரை அவர்கள் என்னிடம் பல ஹீனர்களாகும். உங்களுள் பல ஹீனர்களுக்கு நான் கொடுக்க வேண்டியவைகளை நான் கொடுத்து தீராத வரை அவர்களே மிகவும் பல முள்ளவர்களாகும் என்பதே. ("இப்னுசஃத்" 3-வது வால்யூம் 129-வது பக்கம்).

சமத்துவத்தை யொட்டிய இத்தகைய படிப்பினையானது, இஸ்லாமைப் பின் பற்றியவர்களின் ஹிருதயம், மூளை ஆகியவைகளில் பெரும் உணர்ச்சியை உண்டுபண்ணி விட்டது. பாரிஸ் தேசத்து யுத்த காலத்தில் ஈரானின் படைத்தலைவரிடம் "முகைரா" ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தூதராகச் சென்றிருந்தபோது ஆசனத்தில் ஹஜரத் அவர்கள் இப்படைத் தலைவருக்குச் சமமாக வீற்றுர்கள்: ஆனுல் தர்பாரின் வேலைக்காரர்கள் "முகைரா" ரலியல்லாஹு அன்ஹு அவர்களை ஆசனத்திலிருந்து இறக்கிவிட்டார்கள். உடனே "முகைரா" ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அடக்கமற்று தன்னை யறியாதவர்களாய் "முஸ்லிம்களாகிய நாங்கள் ஒருவரை மற்றெருருவர் அடிமை யெனக் கருதுவதில்லை. ஆனுல் உங்கள் நடத்தையோ மிகப் பெரும் விந்தையாக விருக்கின்றது," என்று பகர்ந்தார்கள். (திப்ரீ பக்கம் 108), இஸ்லாமுக்குரித்தான எண்ணிறந்த லக்ஷணங்களை காலவித்தியாசம் மறைத்துவிட்டதாயினும் நாகரீகம் படைத்த மேல்நாட்டின் வணக்கஸ்தலங்களில் கறுப்பு நிறமுள்ளவர்கள் வெள்ளைநிற முள்ளவர்களோடு சமமாக வீற்றிருக்கக் கூடாதென்பதை யெவரேனும் மறுக்கமுடியுமா? ஆனுல் "மஸ்ஜித்" என்னும் இஸ்லாமிய வணக்க ஸ்தலங்களில் ஒரு கீழ்பட்ட முஸ்லிம் பெருந்தலைவருக்கு சமமாக மட்டுமில்லாமல் சந்தேகமின்றி ஆப்கன் அரசரின் புஜத்தை யொட்டி நின்று தொழுவதை யின்றைக்கும் பார்க்கலாம். இக் கீழ்பட்டவரை அவ்விடத்தினின்று மகற்ற எவராலும் இயலாது.

மேற் கூறப்பட்டுள்ள இஸ்லாமிய அறிவையும், முஸ்லிம்களின் நடவடிக்கையையும் அறிந்த எவரும் இஸ்லாமில் சமத்துவமில்லை யென்றுவது முஸ்லிம்கள் மேல் நாட்டாரிடம் சமத்துவத்தைப் படித்துக்கொள்ள வேண்டுமென்றுவது பகருவரோ?

(தொடரும்)

---

## "ஈமான் உள்ளவர்க்கு பலமுமுண்டு"

(இமாமுல் ஹிந்து மௌலாஞ அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் எழுதியது)

எப்படிப்பட்ட எதேச்சாதிகாரத்திற்கும் உட்பட்டு, எத்தகைய அநியாயத்தையும் அங்கீகரித்து பொறுமையைக் கைவிடாதிருப்பதோடு எதேச்சாதிகாரம் அநியாயம் ஆகியவைகளைப் புரியும் கொடிய

வர்களை விசுவாசித்தும் அவர்களுக்கு நன்றி நிறைவேற்றிக்கொண்டும் இருக்கவேண்டுமேயன்றி இவைகளுக்கு மாற்றமாக எதையும் செய்யக் கூடாதென்று எச்சரித்தே "உங்கள் கரங்களால் உங்களைக் கேட்டில் போட்டு விடாதீர்கள்" என்று அல்லாஹுதஆலா குர்ஆன் ஷரீபில் அறிவித்திருப்பதாய் கூறி "ஆங்கிலேயர் நம்மையாளும் அதிகாரிகளாக இருக்கும் ஸ்திதியில் அவர்கள் நம்மை நினைத்தவாறெல்லாம் நடத்தலாம். ஆதலின் அவர்களை இன்னவிதமாய் கேடிழைக்கலாமா வென்று கேட்பது கூட விசுவாசிகளுக் கழகல்லவென்று உபதேசஞ் செய்ய பலர் முன் வந்து விடுகின்றனர். பலமில்லாதவர்கள், சக்தி இழந்தவர்கள், பலமுள்ளவர்களை எதிர்க்கும் வன்மை யற்றவர்கள் முதலியோர் அதிகாரிகள் புரியும் அநியாயத்தை எடுத்துரைப்பதும் தங்கள் கரங்களாலேயே தங்களைக் கேட்டில் போட்டுக் கொள்ளுவதாகுமென்றும் சிலர் ஜபிக்கின்றனர்.

மேற்கூறியவைகள் இன்று பொதுவாக ஹிருதயங்களுள் ஜனிப்பதும், நாக்கள் உச்சரிப்பதும் சகஜமாகி விட்டன. ஒழுங்கான முறையில் கூட அராசங்கத்தார்மீது குறை கூறுவதும் அரசாங்கத்தில் சீர்திருத்தத்தைக் கோறுவதும் விவேகமல்லவென்று பகறுகிறவர்களும் இன்று நாட்டில் ஏராளமாய் வசிக்கின்றனர். இவர்கள் தங்களின் கூற்றுக்கு மார்க்கத்தையும் உதவிக் கழைத்துக் கொள்ளக்கருதி "தங்கள் கரங்களால் தங்களைக் கேட்டில் போட்டுக் கொள்ளாதீர்கள்" என்னும் திருமறையை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

இத்திருமறை தங்களுக் காதாரமானதென்று இவர்கள் கூறுவதற்கு இமாம் "பக்ருத்தீன் ராஸீ" ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் வியாக்கியானமே முதற்காரணமெனப் பகரலாம். இமாம் அவர்கள் இத்திருமறைக்கு வரைந்திருக்கும் வியாக்கியானமாவது:- "உங்களை நீங்களே கேட்டில் போட்டுக்கொள்ளாதீர்கள்" என்பதன் கருத்து, மரணமடைந்து விடுவோமென்ற அச்சம் மேலிட்டு, எத்தகைய நன்மையையும் எதிர் பார்க்க முடியாத யுத்தத்தில் தங்களுடையக் கரங்களை இடவேண்டாமென்பதே. இவ்வாபத்தை இழுத்துக்கொள்ள எவரையும் மார்க்கம் அநுமதிக்கவில்லை. எதிரிகளை சிக்ஷிக்கமுடியுமென்னும் நம்பிக்கை இருக்குமாயின் வேலை செய்ய முற்படுவது அத்தியாவசியமாகும். இந் நம்பிக்கை யிருக்கும் ஸ்திதியில் மரணமடைந்து விடுவோ மென்ற அச்சமிருப்பினும் சரியே. ஆனால் எதிரிகளை சிக்ஷிக்க முடியுமென்னும் நம்பிக்கை

யற்று, நாமே வெட்டுப்பட்டு விடுவோமென்னும் எண்ணம் மிகைத்திருக்கும்போது (வேலை செய்ய) முற்படக் கூடாது.'' என்பதே.

"தங்கள் கைகளாலேயே தங்களைக் கேட்டில் போட்டுக் கொள்ளாதீர்கள்'' என்னும் திருமறைக்கு இமாம் ராஸீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் வியாக்கியானம் செய்யும்பொழுது சில ஆக்ஷேபனைகளைச் செய்து அவ்வாக்ஷேபனைகளுக்கு இமாம் அவர்கள் தாங்களாகவே சமாதனங் கூறியுமிருக்கின்றார்கள். ஏனெனில் இமாம் அவர்களின் வியாக்கியானத்தில் சந்தேக மேற்படாமலும், அபிப்பிராயபேத முண்டாகாமலும், இவ் வியாக்கியானம் சரி யென்று ஏற்றுக் கொள்ளப்படவுமே. இஸ்லாமிய ஜய பேரிகை யடங்கி முஸ்லிம்களின் முன்னேற்றத்திற்கு க்ஷீண திசை ஆரம்பமாகி யிருந்தகாலமே இமாம்ராஸீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் காலமாக யிருந்தது. முஸ்லிம் உலகத்தில் அமைதியின்மையும், உள் சண்டையும் அபரிமிதமாகயிருந்தது. ஹிஜ்ரீ 606ல் இமாம்ராஸீ ரஹ்மத்துல்லாஹிஅலைஹி அவர்கள் விண்ணுலகை யடைந்தார்கள். ஹிஜ்ரீ 567ல் அஃதாவது இமாம் ராஸீ ரஹ்மத்துல்லாஹிஅலைஹி அவர்கள் விண்ணுலகை யடைய 39 வருடங்களுக்கு முன்புதான் தாத்தாரிகளின் வெள்ளம் "ஜைஹூன்'' என்னும் சமுத்திரத்தைக் கடந்து "ஹவாரிசமை'' நோக்கிச் செல்ல வாரம்பித்தது. முஸ்லிம்களின் நாடாகிய மிஸர், ஷாம், ரூம், தூனிஸ் ஆகிய தேசங்களில் சிலுவையுத்தம் நடந்து வந்தது. இஸ்லாமிய தேசமெங்கும் படுகொலை புரியப்பட்டு வந்தது. இஸ்லாமிய எதிரிகள் முஸ்லிம்களின் பட்டினங்களை ஒன்றன்பின் ஒன்றாய்க் கைப்பற்றிக் கொண்டிருந்தார்கள். அன்றியும் ஜயிக்கப்பட்ட முஸ்லிம்கள் வெட்டப்பட்டும், அவர்கள் பட்டினங்கள் தீக்கிரையாக்கப்பட்டும் வந்தன. முஸ்லிம்கள் நாளுக்குநாள் தைரியமற்றவர்களாயும், அச்சம் மேலிட்டவர்களாயு மிருந்தார்கள். இந் நிலைமையில் முஸ்லிம்கள் தங்கள் விரோதிகளை எதிர்ப்பது மரணமும், அழிவுமே நிச்சயமெனக் கருதப்பட்டது.

சாவுக்கஞ்சி உயிரைக் காக்கவேண்டுமென்ற எண்ணம் முதிர்ந்துவிட்டபோதும், தோல்வி யுறுவோம் என்னும் நிச்சயமானது வேலை செய்யவிடாமல் தடுக்கும்போதும், எதிரியை நோக்கிச்செல்வது அழிவேயெனக் கொள்ளும்போதும், எதிரிகள் புரியும் அக்கிரமத்தை தடுப்பதில் தன் நாசம் உருவமெடுத்துத் தோன்றும்போதும், சில ஜனங்களின் தைரியத்தை சின்னபின்னப் படுத்தும் பொருட்டு குர்

ஆன்ஷரீபை பக்கபலமாக்கிக்கொண்டு வெளிக்கிளம்புவதும் ஆச்சரிய மல்ல. அன்றியும் இது ஒரு சர்வ சாதாரணமான காரியமென்றே கருதப்படுகிறது.

காலத்தின் சுழல், அக்கம் பக்கத்தின் ஸ்திதி, அரசாங்கமாறுதல் தேசப்புரக்ஷி ஆகியவைகள் ஒவ்வொரு விஷயத்திலும் தங்களின் செல்வாக்கைக் காட்டாமலிருப்பதில்லை. ஜனசமூகத்தார் முன்னேற்றமடையும் பொருட்டு அல்லாஹுதஆலா குர் ஆன் ஷரீபில் கூறியுள்ள ஆயத்துகளையும் க்ஷீணித்துப் போனவர்கள் தங்களின் க்ஷீணதிசைக் கேற்றவாறு வியாக்கியானம் செய்யப்பின் வாங்குவதில்லை. ஆளப்படும் வகுப்பார் தாழ்ந்து போகவும் அசுத்தமான அடிமை வாழ்க்கையை கைகொள்ளவுங்கூட குர் ஆன் ஷரீபிலிருந்தும், ஹதீது ஷரீபிலிருந்தும், ஆதாரங்கள் கிடைத்து விடுகின்றனவாம்.

ஜயமேற்படுமென்று நிச்சயிப்பதற்கு வேண்டிய சகல சாதனங்களும் கிட்டாதவரை முக்கியமான விஷயங்களில் ஈடுபடுவது, அழிவைத்தன் கரத்தால் இழுத்துக் கொள்வதாகு மென்று, இஸ்லாம் அறிவிப்பதாக நம்புவோமாயின் இஸ்லாமிய ஆரம்பத்தில் இஸ்லாமை ஏற்றுக் கொண்ட பரிசுத்தமான வகுப்பார் உலக சம்மந்தமான எச்சாதனமுமின்றி ஏழ்மையாக இருந்து வந்த போது, “கிஸ்ரா” “கைஸர்” என்னும் பெரிய சக்கிரவர்த்திகளின் சிம்மாசனத்தையும், கிரீடத்தைபும் கைப்பற்றிக் கொள்ள முற்பட்டது, “பத்ர்,” “ஹுனைன்” ஆகிய யுத்தங்களைப் புரிவதற்கு மிகச் சிறியதொரு கூட்டத்தோடு வெளிக்கிளம்பியது நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி, வஸல்லம் அவர்களின் மதீனமாநகரின் மீது “முர்த்தத்” என்னும் கொடியவர்கள் போர் தொடுப்பார்களோ வென்னும் சந்தேகம் மேலிட்டிருந்த ஸ்திதியில், அஞ்ஞான இருளை அகற்றுவதற்காக முழு அரேபியாவிலும் போர் தொடுக்க முற்பட்டது, இவ்வபாயகரமான சந்தர்ப்பத்திலேயே “ரோமன்” சக்கிரவர்த்தியை எதிர்ப்பதற்கு சைனியம் திரட்டியது முதலியவைகள் “தங்கள் கரங்களால் தங்களைக் கேட்டில் போட்டுக் கொள்ளாதீர்கள்” என்று அல்லாஹுதஆலா அறிவித்திருக்கும் பஹிரங்கமான உத்திரவுக்கு விரோதமான காரியங்களென்று பகர இடந்தரு மல்லவா?

எண்ணிக்கையில் மிகக் குறைந்தஅவ்வுத்தமர்கள் தங்களின் எதிரிகள் அபரிமிதமாக யிருப்பதை யொட்டி அவர்களின் தைரியம் குறைந்துபோகவில்லை. முழு உலகத்தின் அநியாயத்தையும் ஈமானின் அளவற்ற சக்தியைக் கொண்டு அடக்கிவிட உதவி புரிவதாய்

அல்லாஹுத ஆலா செய்து கொடுத்திருக்கும் வாக்குறுதியில் அவ் வுத்தமர்கள், விசேஷ உறுதி வைத்திருந்தார்கள்.

எதிரிகளை அடக்குவதற்கு வேண்டிய வெளித்தோற்றமான சாதனங்களை அவ்வுத்தமர்பெற்றிருக்கவில்லை. அவ்வண்ணமே நாமும் சாதனமற்றவர்களாக இருந்து வருகிறோம். "ஈமான்" என்னும் உறுதியைக் கொண்ட அளவற்ற பெரும் சக்தி அவ் வுத்தமர்களுக் கிருந்து வந்ததைப்போல் அச்சக்தி நமக்கும் இருப்பதாய் கூறிவரு கின்றோம். ஈமானின் பிரத்தியேகமான அரிய சக்தியைக் கொண்டே அவ்வுத்தமர்கள் கீர்த்தி வாய்ந்தவர்களாக விருந்தார்களென்னும் ஸ்திதியில் நாமும் ஈமானுக்குரிய சக்தியின் மூலமாய் இவ்விழிவான அடிமை வாழ்க்கையை விட்டு மீக்ஷி பெறக் கூடுமல்லவா? ஈமானின் லக்ஷணமாகிய சக்தியும் தைரியமும் நம்மிடம் இல்லையாயின் நமக்கு ஈமானிருப்பதாய்க் கூற முடியுமா? நமக்கு ஈமான் இல்லாது போயின் நம்மை முஸ்லிம் என்று அழைத்துக்கொள்ள இஸ்லாம் இடந்தருமா? நம்மிடம் இஸ்லாம் இல்லாது போயின் நாம் முன்னேற்ற மடைவோ மென்னும் நம்பிக்கையைக் கொள்ள வழியுண்டா? இஸ்லாமை இழந்துவிட்டபின் நம்முடைய க்ஷீணதெசையை யொட்டி ஆத்திரப் பட நியாயமுண்டா?

(தொடரும்)

---

# இஸ்லாமும் சத்தியபிரசாரமும்

"புக்தெநஸர்" என்னும் அரசனின் அதிக்கிரமச் செய்கையால் "பனீ இஸ்ராயீல்" களுக்கேற்பட்ட நாசமத்தனையும் முஸ்லிம் களும் அனுபவிக்க வேண்டியதாயிற்று. இதற்குக் காரணம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விண்ணுலகடைந்தபின் முஸ்லிம்களுள் ஏற்பட்ட வேற்றுமை, இஸ்லாமிய ஜனநாயகதத்துவ அரசாங்கத்திற்குப் பதிலாய் "பனீ உமையாக்கள்" ஏற்படுத்திய ஏதேச்சாதிகார அரசாங்கம், அவ்வரசாங்கம் விசாலமாக வேண்டு மென்ற எண்ணம், அவ்வெண்ணத்தை யொட்டிச் செய்யப்பட்டக் காரி யங்கள், முஸ்லிம்கள் அஜம் தேசத்தாரின் பழக்க வழக்கங்களைப் பின் பற்றியது, நல்லன வற்றை யேவிக்கெடுதியை யகற்ற வேண்டு மென் னும்இஸ்லாமிய முதற் கடமையை நிறை வேற்ற முஸ்லிம்கள் பின் வாங்கியது, முஸ்லிம்களால் ஆளப்பட்டு வந்த ஆக்ஷியின் தலைநகரமா கிய பக்தாதின்"க்ஷீணதெசை, அரேபிய ஆக்ஷியின் அழிவு, ஆகியவை

களாகும்.'' பனீ இஸ்ராயீல்கள் அனுபவித்த கஷ்டங்களில் எதையும் முஸ்லிம்கள் அனுபவிக்காமல் தப்பவில்லை யென்றே கூறலாம். ஆனால்''பனீ இஸ்ராயீல்கள்,'' தங்களின் கௌரவத்தை இழந்ததைப் போல், இஸ்லாமின் கௌரவத்தை அழிக்கக் கூடவில்லை. '' இஸ்லாமைக் காப்பாற்றுவேனென்று'' அல்லாஹுத ஆலா செய்திருக்கும் வாக்குறுதியே இதற்கு காரணமென்று பகருவதும் மிகையாகாது.

இஸ்லாமின் அரிய வித்தானது ஒருபக்கத்தில் உருக்குலையுமாயின் மறுபக்கத்தில் அதன் விருக்ஷம் சந்தேகமின்றி வெளிவரும். காலக்கிரமத்தின் இடையூறுகள் அவ்விருக்ஷத்தின் கிளை இலை முதலியகைவளை அறுத்தெறியுமளவு அவ்விருக்ஷம் ஓங்கி வளர்ந்து கொண்டே இருக்கும். அமைதியின்மை, சூழ்ச்சி, அநியாயம் முதலியவைகளின் காற்று, அவ்விருக்ஷத்தின் கிளைகளை சதா அசைத்துக் கொண்டிருந்ததாயினும் அல்லாஹுத ஆலாவின் காரணக் கரங்கள் அவ்விருக்ஷத்தின் வேர்களைக் காப்பாற்றி வந்தன. அவ்விருக்ஷத்திலிருந்து இலைகள் உதிர்ந்து விழுந்து கொண்டிருந்தனவாயினும், பூமிக்குள் அவ்விருக்ஷத்தின் வேர்கள் பலம் பெற்றதாக யிருந்தன. இஸ்லாமுக்கு முன் தோன்றியவர்களின் எல்லா வழிகேடுகளிலும், அழிவுகளிலும் முஸ்லிம்களும் சிக்குண்டார்களென்பது உண்மையே, மக்காவின் முஷ்ரிக்குகளுடைய எந்த வழிகேட்டையும், முஸ்லிம்களென்போர் பின்பற்றாதிருக்கவில்லை. ஆனால் கடைசி மார்க்கமாகிய இஸ்லாமைக் காப்பாற்ற அல்லாஹுத ஆலா பொறுப்பேற்றுக்கொண்டிருந்ததால், எவ்வழிகேடும் இஸ்லாமிய அறிவின் அஸ்திவாரத்தை அழித்துவிட சக்தி பெறவில்லை. அன்றியும் கூட்டல், குறைத்தல், மாற்றல், திருத்தல், அழித்தல் என்னும் துர்க்கிருத்தியங்களை விட்டு ''குர்ஆன்ஷரீபு'' காக்கப்பட்டு வருவதை உலகம் நன்கறியும்.

அசத்தியம், அநியாயம், முதலிய துர்க்கிருத்தியங்களை யகற்றி உலகில் சத்தியத்தை நிலைநிறுத்தும்பொருட்டு சதா முஸ்லிம்களுள் ஒரு வகுப்பு இருந்துவர அல்லாஹுத ஆலா அருள் புரிகின்றான். எண்ணிக்கையில் எத்தனை குறைந்தவர்களாயினும், இவ்வகுப்பார் நாலுபுறங்களிலும் பரவியிருக்கும் அசத்தியம், வழிகேடு ஆகியவைகளை விட்டு தங்களைப் பேணிக் கொண்டவர்களாய் சகாயம், ஆதரவு, அழிந்துபோகும் உலோகக் கருவிகள் முதலியவைகளைக் கோராதவர்களாய், நல்லனவற்றையேவிக் கெடுதியை யகற்றுவதென்னும் ''ஜிஹாதில்'' சதா ஜயசீலர்களாயிருந்து வந்தனர். என்னும் செய்தியை சரித்திரங்

கள் இன்றைக்கும் வரைந்த வண்ணமாகவே யிருக்கின்றன. இவ்வகுப் பாரின் ஹிருதயத்தையும் மூளையையும் அல்லாஹுதஆலா தன் ஸ்வா தீனத்திலாக்கி அவைகளின் மூலமாய் முஸ்லிம்களுக்கு நேரான வழியை அளித்து வருகின்றான்.

உலகில் சதா உண்மையிருந்து வந்திருக்கின்றது. அவ்வுண்மை பற்பல நாமங்களைக் கொண்டதாயு மிருந்தது. ஆனால் அவ்வுண்மை யின் கடைசி பிரகாசமே இஸ்லாமாகும். ஆகவே இக்கடைசி ஒளி பூரணமாயும், மாற்றக் கூடாததாயும், ஷைத்தான்களின் சக்திகள் அவ்வொளியின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாததாயும் இருக்க வேண்டுவது அவசியமே.

இஃதோர் உண்மையாகும். இவ்வுண்மையைப் பற்றின விளம் பரம் வெகு காலத்திற்கு முன்பே பஹிரங்கமாகிவிட்டது. இவ்வுண் மையைக் "குர்ஆன்ஷரீப்" மட்டுமின்றி ஹதீதுஷரீபுகளும் தெளிவாய் விளக்கிக் காட்டியிருக்கின்றன.

ஹதீது

"இவ்வுலக முடிவுநாள்வரை என் உம்மத்தில் ஓர் உண்மை வகுப்பார் சதாவழிகெடு, துர்க்கிருத்தியம் ஆகியவைகளை அடக்குவ தற்காக நடைபெறும் போரில் ஜய சீலர்களாக விருப்பார்கள்.

இப்த ஹதீதை "முகைரா" ரலியல்லாஹு அன்ஹு அவர் கள் ரிவாயத்து செய்ததாக இமாம் "புகாரீ" "முஸ்லிம்" ஆகிய இருவரும் வரைந்துள்ளார்கள்.

ஹதீது

"சதா என் உம்மத்தில் ஒரு கூட்ட மிருந்து வரும். அக்கூட்டம் உண்மையையும் சத்தியத்தையும் வெளியிட்டு ஜயம்பெறும். அசத்தி யத்தை பூஜிப்பவர்கள் (இவ்வுண்மையாளர்களை) எதிர்ப்பார்கள். ஆனால் இவர்களின் கெடுதியினின்றும் அவ்வுண்மையாளர்களை அல்லாஹுத ஆலா காப்பாற்றியருள்வான்." இந்த ஹதீது "முஸ்லிம்" "திர் மதீ," "இப்னுமாஜா" ஆகியவைகளில் வரையப்பட்டிருக்கின்றது. "இப்னுமாஜா" "நஸாயீ," ஆகியவைகளில் வரையப்பட்டிருக்கும் வேறு சில ஹதீதுகள், "உண்மையின் விரோதிகளை யெதிர்த்து நிற்கும் உத்தம வகுப்பார், தங்களுள் அபாரமான பெரும் சக்தி யைக் கொண்டிருப்பார்கள். ஆகவே அவ்வுத்தமர்களை நஷ்டப்படுத் தக் கருதி வேலை செய்வோர் சித்தி பெற மாட்டார்களென்றும் கூறு கின்றன.

அநியாயம், அசத்தியம், ஏதேச்சாதிகாரம் முதலிய ஒவ்வொரு இருள் சூழ்ந்த காலத்திலும், நல்லதை யேவிக் கெடுதியை யகற்றுவ தென்னும் சத்தியப் பிரசாரத்தின் ஒளி, ஜீவனுள்ளதாய் நிலைத்திருந் ததையும், அவ்வொளியை "இப்லீஸின்" சக்தியாவது, வழிக் கேட்டின் வெள்ளமாவது அடக்க முடியாதிருந்ததையும் உலகம் பார்க்க வில்லையா? இது அல்லாஹுத ஆலாவின் அந்தரங்க உதவியல்லவா?

இஸ்லாமிய பூர்வ அரசாங்கம் சின்னாபின்னமாகி, அரபி அரசாங்கம் ஒழிந்து. அமீர்கள், சுல்தான்கள் ஆகியவர்கள் சுயநலம் கருதி உல்லாச வாழ்க்கையைக் கைகொண்டு, உண்மையான உலமாக்கள் குறைந்து அன்னவர்கள் ஏழ்மையாகி, முஸ்லிம்கள் படு கொலை செய்யப்பட்டு வந்த நெருக்கடியான காலத்தின் சரித்திரத்தை எடுத்து வாசிப்போமாயின் அந்நாளில்கூட பரிசுத்தமான ஹிருதய முள்ள சில உத்தமர்கள் சத்தியப் பிரசாரம் புரிந்ததைப் பார்க்கலாம். அவர்களின் ஹிருதயங்கள், உண்மை, சத்தியம் ஆகியவைகள் மட்டும் சுகமேவாழும் இல்லங்களாக இருந்தன. முஸ்லிம்களுள் மதக் கல்வியற்று அன்னவர்கள் பரிதபிக்கத் தக்க நிலைமையடைந்திருந்த எட்டாவது நூற்றாண்டிலும் சில உத்தமர்கள் நல்லனவற்றை யேவிக் கெடுதியை யகற்றும் ஊழியத்தை அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களாய் புரிந்து வந்தார்களல்லவா?

இந்தியாவின் சரித்திரத்தில் அக்பர் சக்ரவர்த்தியின் காலத்தைக் குறிப்பிடுவது அவசியமாகும். ஏனெனின் அக்காலத்தில் சுல்தான்களையும், அரசர்களையும் அடிபணிந்த உலமாக்களே அரசாங்கத்தில் ஆதிக்கம் பெற்றிருந்தார்கள். இவ்வுலமாக்கள் பரிசுத்தம், நல்லொழுக்கம், மதம் என்னும் கீர்த்தி வாய்ந்த போர்வைகளால் தங்களைப் போர்த்துக் கொண்டு தங்களின் சுயநலம், பெருமை, கெட்டமனோ இச்சை ஆகியவைகளுக்கு வேண்டுவன வற்றைப் புரிந்து வந்தார்கள். இக்கொடிய காலத்திலும் சில உத்தமர்கள் சத்தியத்திற்குப் புத்துயிரளித்து, இஸ்லாமிய உத்திரவுகளைப் பகிரங்கப் படுத்தி, நல்லன வற்றை யேவிக்கெடுதியை யகற்றும் ஊழியத்தில் தங்களை அர்ப்பணம் செய்து விட்டார்கள்.

ஹிஜ்ரீ பதினோராவது நூற்றாண்டின் கடைசியிலும் ஹிஜ்ரீ பன்னிரண்டாவது நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஹஜ்ரத் "ஷாஹ் வலியுல்லாஹ்" அவர்களும், அவர்களின் குடும்பத்தினர்களும் நல்லன வற்றை யேவிக்கெடுதியை யகற்றுவதற்காகச் செய்திருக்கின்ற ஊழியம் மகா ஆச்சரியத்தைத் தரத்தக்கதாக விருக்கின்றது.

ஒவ்வொரு காலத்திலும் சந்தேக மின்றி சில உத்தமர்களிருந்து வருகின்றனர். ஒரு வகுப்பில் பிறந்தவர்களாயும், ஆரம்ப முதல் வாலிப திசையை யடையும் வரை அவ்வகுப்பிலிருந்து வளர்ந்தவர்களாயும், அவ்வகுப்பாரின் பழக்க வழக்கம், சடங்கு சாங்கியம், கொள்கை ஆகியவைகளால் சூழப்பட்டவர்களாயும், அசத்தியம் நிறைந்த வார்த்தைகளை செவியுற்றவர்களாயும், அநியாயம், வழிகேடு முதலிய கொடியவைகளைப் பார்ப்பவர்களாயுமே இவ்வுத்தமர்களிருந்து வருகின்றனர். ஆனால் அவர்களை இவ்விருளினின்றும் இழுத்து நல்வழியை யடையும்படி ஓர் இரகசிய கரம் உதவிபுரிகின்றது. ஆகவே இவர்களின் ஹிருதயம் சத்தியமென்னும் பிரகாசத்தால், ஜ்வலிக்க ஆரம்பித்து விடுகிறது, இவ்வுத்தமர்கள் பேச ஆரம்பித்தால், அக்காலத்தின் பொதுவான கொள்கை, செய்கை ஆகியவைகளுக்கு முரண்பட்டதாக இருக்கின்றது. இவ்வுத்தமர்கள் தங்களின் கூட்டம், அவர்களின் மூலமாய்க் கிடைத்த படிப்பினை, பழக்க வழக்கம், தேசத்தின் சடங்கு, ஆகியவைகளைவிட்டு ஒதுங்கி ஜனங்களை சத்தியம், உண்மை ஆகியவைகளை ஏற்றுக் கொள்ளும்படி அழைக்கின்றனர்.

மனிதன் தன்னைச் சுற்றியுள்ள கொள்கை, எண்ணம், செய்கை ஆகியவைகளை ஏற்றுக் கொள்ளும் சுபாவமுடையவனாகவே யிருக்கின்றான். மனிதன் உலகில் ஒரு குறிப்பிட்ட கூட்டத்தின் மத்தியில் தன் காலத்தைக் கழிப்பவனாகவிருப்பதால் அக்கூட்டத்தின் சொற் செயல், நடை நொடிபாவனை, கொள்கை முதலியவைகள் அவனுள் வேரூன்றி விடுகின்றன. ஒவ்வொரு மனிதனும் தன்னைச் சூழ்ந்து கிடக்கும் பழக்க வழக்கங்களையே உணரக் கூடியவனும், அறியும் திறமையுடையவனும் இருக்கும் ஸ்திதியில், அவை யெல்லாவற்றையும்விட்டு முற்றும் நீங்கினவனாய், அவைகளுக்கெதிரிடையான கொள்கையை யொட்டிய ஒரு வழியைத் திறந்து விடுவது குறிப்பிடத் தக்கதல்லவா? ஜனங்களுக்கு நல்வழியைக் காட்டுகிறவர்களே புகழுக்குரிய உத்தமர்களாகும். இவ்வுத்தமர்களை உலகமெல்லாம் எதிர்த்தாலும்கூட, பழக்க வழக்கம், கொள்கை, நடை நொடி பாவனை ஐசுவரியம், அரசாங்கம் முதலியவைகளை யடக்கி உண்மையை ஸ்திரப்படுத்து வதற்காக முற்பட்டு விடுகின்றனர். விக்கிரகத்தை உற்பத்தி செய்யும் "ஆஜர்" என்பவரின் இல்லத்திலேயே அதை நாசமாக்குவதற்கான இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஜனனமானார்களல்லவா?

சந்தேகமின்றி அல்லாஹுதஆலா பூமியினுள் வித்தைத் தெளித்து அதிலிருந்து சக்தியும், உயரமும் உள்ள ஒரு மரத்தை உண்டுபண்ணி விடுகின்றான். மரணமடைந்துள்ள வைகளிலிருந்து ஜீவனுள்ள வைகளையும், உயிருள்ளவைகளிலிருந்து ஜீவனற்றவை களையும் உண்டுபண்ணி ஆச்சரியகரமானவைகளை வெளியிடத்தக்க அல்லாஹுத ஆலா உங்கள் எஜமானனாக இருக்கும் ஸ்திதியில், நீங் கள் (அவனை விட்டு) எங்கு விரைந்து ஓடுகின்றீர்கள்? (அல்குர் ஆனின் வியாக்கியானம்) எந்தக் கூட்டம், தேசம், குலம், முதலிய வைகளைச் சேர்ந்தவர்களாயினும், நல்லன வற்றை யேவிக்கெடுதியை யகற்றுவது நபித்துவத்தின் பிரகாசத்தைப் பெற்றுக்கொண்ட ஊழி யமாகும். இவ்வுத்தம ஊழியத்தைப் புரிவோர், நல்லொழுக்கத்தில் ஈடுபட்டுப் பிறகு படிப்படியே மேன்பதவியை அடைகின்றனர். அல் லாஹுதஆலா இவர்களின் ஹிருதயங்களை நபித்துவத்தின் பிரகா சத்தால் ஜ்வலிக்கும்படிச் செய்து விடுகின்றான். பகலவன் தன்னொ ளியால் நக்ஷத்திரங்களை பிரகாசிக்கச் செய்வதுபோல், நபித்துவத் தின் ஒளியானது இவ்வுத்தமர்களின் ஹிருதயத்துள் பிரகாசத்தை யுண்டு பண்ணிவிடுகிறது.

நபிமார்கள், சித்தீக்கீன்கள், ஷுஹதாக்கள் சாலிஹீன்கள் ஆகியவர்களையே "குர்ஆன் ஷரீபு" கீர்த்திவாய்ந்தவர்களெனத் துதிக்கின்றது. அன்றியும்ஷைத்தான்களின் சக்திகளை வெறுத்து அல்லாஹுத ஆலாவையும், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களையும் அடிபணிந்தவர்களே இந்நான்கு வகுப்பினர்களின் கூட்டுறவை யடைவார்கள்.

---

# தப்புகள் அடிப்பதும் புதக்குடி மத்ரஸாவின் பத்வாவும்

கல்யாணத்திற்குப் பைத்துகளையும், பாடல்களையும் (பலவாலி பர்கள்) இராகமாகப் பாடியவர்களாகத் தப்புகளைஅடித்துக் கொண்டு ஊர்வலம் சுற்றி வருவது ஆகாதென்று கேள்வியுற்றிருந்தயான் இதை வினவுவதற்காக கீழ் எழுதப்பட்டிருக்கும் வினாவைக்குறித்துக் கொண்டு 13-7-25-ல் புதக்குடி மத்ரஸாவிற்குச் சென்று அம் மத்ரஸாவின் நாஸீர் மௌலவி அப்துல்கரீம் சாகிப் அவர்களிடம் மேற்கூறியபடி பாடல்களால் இராகம் பாடிக்கொண்டும் அதற்கேற்ப

தப்புகளை அடித்துக்கொண்டும் ஊர்வலம் சுற்றுகிறது நமது மார்க்க சட்டப்படி ஆகும் என்பதற்கு தங்கள் கையெழுத்துடன் பத்வாக் கொடுக்கவேண்டுமென்று கேட்டேன். நாஸிர் அவர்கள் பத்வா எழுதி தங்கள் மாணுக்கருள் ஒருவரைக் கையொப்பம் வைக்கச் சொன்னார்கள். ஆதலின் நான் தாங்களே கையெழுத்திட வேணுமென்று கேட்டுக்கொண்டேன். மத்ரஸாவிற்கு ரூபாய் 5 கொடுத்தாலன்றி நான் ஒப்பம் வைக்க முடியாதென்று சொல்லி நாஸிர் அவர்கள் மேற்படி மாணுக்கரையே கையொப்பமிடச் செய்தார்கள். மேல் சொல்லப்பட்ட விணுவும் விடையும் வருமாறு :—

விணு

பல வாலிபர்கள் ஒன்றுசேர்ந்து கையில் தப்புகளை வைத்துக்கொண்டு சில பாடல்களையும் பைத்துக்களையும் இராகமாகப் பாடியவர்களாக அதற்கேற்ப தப்புகளை அடித்துக்கொண்டு ஊர்வலம் சுற்றும் வழக்கமிருந்து வருகிறது.

தவிர, மேற்கூறிய வாலிபர்கள் கல்யாண ஊர்வலங்களுக்குக் கூலி பேசிக்கொண்டும் மேற்கூறியவாறு எல்லாரும் ஒன்று சேர்ந்து பைத்துகளையும் பாடல்களையும் இராகமாகப் பாடிக்கொண்டு அதற்கேற்ப தப்புகளை அடித்துக்கொண்டு ஊர்வலம் சுற்றி வருகிறார்கள். இத்தகைய செயல் நமது சுன்னத்து ஜமாஅத்தார்களிடத்தில் மார்க்க சட்டப்படி ஆகுமா ஆகாதா? கற்றறிந்த உலமாக்கள் இதற்கு ஜவாப் சொல்லும்படிக் கோருகிறேன்.

விடை

கல்யாண இரவு அதைப் பிரபலப்படுத்துவதற்காக தப்பு அடிக்கிறது ஆகுமென்று கன்சு உடைய ஷரஹிலும் ரத்துல் முக்த்தாரிலும் வருகிறது. தப்பு அடிப்பது ஆகாதென்று சொன்னவருடைய சொல்லை ஒப்புக்கொள்ளக்கூடாதென்று ஷரஹ்விக்காயாவுடைய ஹாஷியாவில் வருகிறது.

(ஒப்பம்)

முகம்மது அப்துல்கனி கோட்டார்,
ஹஸன் சேகு முகைய்யதீன் மகனர்,
மத்ரஸா நூர் முகம்மதிய்யா,
ஹிஜ்ரி 1342 துல்ஹஜ்ஜுமீ 21உ

புதக்குடி.

குறிப்பு :—மேற்கண்ட வினாவில்‘குறிப்பிட்டுள்ள அம்சங் களுக்கு விடை சரிதான் அல்லது சரியல்ல என்பதை ஆராய்ச்சி செய்து தக்க சமாதானத்துடன் பத்திரிகை வாயிலாகத் தெரியப் படுத்தும்படி கற்றறிந்த உலமாக்களிடம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
கோ. மு. முஹம்மத் சாஸிம்,
கூத்தாநல்லூர்

---

# தப்புகள் அடிப்பதும் உலமாக்களின் பத்வாவும்

கல்யாணங்களில் தப்பு அடிப்பது ஆகுமா? ஆகாதா என்ற பிரச்னை வெகு நாளாய் நடந்து வருகிறது. அது சம்பந்தமாய்ப் பொதக்குடி மத்ரஸாவின் பத்வா ஒன்று 29-8-25-ல் “ஸைபுல் இஸ்லா”மில் பிரசுரிக்கப்பட்டிருப்பது நேயர்களுக்கு ஞாபகமிருக்க லாம். அந்த பத்வாவில் கல்யாணத்தைப் பிரபலப்படுத்து வதற்காக தப்பு அடிப்பது ஆகுமென்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், தப்பு எப்படி அடிக்க வேண்டுமென்ற விபரம் குறிப்பிட வில்லை. இராகம் பாடிக்கொண்டு அதற்குத் தோதாய் தப்பு அடிக்கிறார்கள். அது ஆகுமா ஆகாதாவென சுவாலில் கேட்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஜவாபாக தப்பு அடிக்கிறது ஆகுமென்று பொதக்குடி பத்வா கூறுகின்றது, இதனால்தான் சுவால் கேட்டவர் தன்னுடைய குறிப் பில் சுவாலில் கண்ட அம்சங்களுக்கு பொதக்குடி பத்வா சரியாயிருக் கின்றதா? இல்லையா? என உலமாக்களிடம் வினவுகிறார்.

தப்பு அடிக்கும் விஷயமாக ஏற்கனவே உலமாக்கள் தக்க சன துடன் பத்வா வெளியிட்டிருக்கிறார்கள். அதனை முதலில் தருகின் றோம். அதன்பின் பொதக்குடி மத்ராஸாவின் பத்வாவை ஆரா ய்ச்சி செய்வோம். உலமாக்களிடம் கேட்கப்பட்டிருந்த சுவால் வரு மாறு :—

கற்றறிந்த உலமாக்களே !

அல்லாஹுதஆலாவின் சாந்தி உங்களுக்கு உண்டாகுக. நமது நாட்டில் நிகாஹ் நடக்கும் காலங்களில் தப்புகள் அடிக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. அது ஆகுமா ஆகாதாவென்பதை விப

ரமாய் எழுதி அல்லாஹூத ஆலாவிடத்தில் நற்கூலி பெற்றுக் கொள்ளுவீர்களாக.

ஜவாபு

கல்யாணங்களில் தப்பு அடிப்பது ஆகுமான தாயிருக்கிறது கல்யாணத்தைப் பகிரங்கப்படுத்துங்கள். அதனைப் பள்ளிவாசலில் வைத்துச் செய்யுங்கள். அதன் பேரில் தப்பு அடியுங்கள் என்று நாயகம் (ஸல்) திருவுளமாயிருக்கிறார்கள்.

அல்லாமா அய்னி (றஹ்) கன்ஸூடைய ஷரஹில் கீழ்வருமாறு எழுதியிருக்கிறார்கள். "கல்யாணத் தினிரவு அதனைப் பிரபலப்படுத்துவதற்காக தப்பு அடிப்பது பாதகமல்ல. ஆனால் தப்பு அடிப்பது விளையாட்டுக்காகவும் பெருமைக்காகவும் இல்லாமலிருக்க வேண்டும். இன்னும் இராகம் பாடும் விதமாகவுமிருக்கக்கூடாது. அப்படியிருக்குமாயின் தப்பு அடிப்பது ஆகாது. ஏனென்றால், றத்துல் முஹ்தாரில் ஸிறாஜிய்யிலிருந்து நகல் செய்து எழுதியிருக்கிறார்கள். தப்பு அடிப்பது ஆகுமென்பதானது அந்த தப்புக்கு சலங்கை இல்லாமலிருக்கவேண்டும். இன்னும் அந்த தப்பு இராகம் பாடியும் அடிக்கப்படாமலிருக்க வேண்டும். அவ்வாறுதான் தப்பு அடிப்பது ஆகும்." பவாயிதுல் முஹத்தப் என்னும் கிதாபில் காலி அபூ அலிய்யுல் பாருகிய்யி சொல்லியிருப்பதாவது, விரலின் நுனியைக் கொண்டு சுண்டியோ அல்லது வேறுவகையாய் இராகம் பாடும் விதமாகவோ அடிக்கப்படும் தப்பு ஜாயிஸாக மாட்டாது.

இந்த பத்வாவில் அடியில் கண்ட உலமாக்கள் கையொப்ப மிட்டிருக்கிறார்கள். மதராஸ் மௌலானா முஹம்மது தமீம் ஆலிம் சாஹிப், மௌலானா மஹ்மூது சாஹிப், மௌலானா காஜி உபைதுல்லா சாஹிப், மௌலானா முஹம்மது குத்ரத்அலீ முன்னுஹிரிய்சி, மௌலானா ஸபியுத்தீன் முஹம்மது சாஹிப், மௌலானா ஹாஜி குலாம்றசூல் சாஹிப், மௌலானா முஹம்மது மஅசூம் சாஹிப், மௌலானா முஹம்மது அஃலம் ஹூசைனிய்யுஸ் ஸித்தீகிய்யுல் ஹனபிய்யுல் கய்ரு பாதிய்யுல் மதனிய்யி, வேலூர் உலமாக்கள், மௌலானா அப்துல் காதிருபாஷா சாகிப் மௌலானா முகம்மது அப்துல் ஜப்பார் சாஹிப், மௌலானா செய்கு ஆதம் சாஹிப், மௌலானா முஹம்மது கமாலுத்தீன் சாஹிப், மௌலானா முஹம்மது முஹியித்தீன் ஹூஸைன் சாஹிப், மௌலானா அப்துர் ரஹீம் சாஹிப், மௌலானா ஸய்யித் ஹைதர்வலியுல்லாஹ் சாஹிப் காதிரிய்யி, மௌலானா அப்துல்லதீப் சாஹிப் காதிரிய்யி.

பாரதூரமான இத்தனை உலமாக்களும் கையொப்ப மிட்டு இந்த பத்வாவை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் தப்பு விஷயமாக புகஹாக்களின் முடிவான தீர்மானத்தை வரைந்திருக்கிறார்கள். கல்யாணங்களில் தப்பு அடிப்பது ஆகு மென்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. நபிகள் நாயகம் அவர்கள் நிகாஹில் தப்பு அடிக்கும்படி ஏவியுமிருக்கிறார்கள், என்றாலும், இராகம் பாடிக்கொண்டு தப்பு அடிக்கிறது ஆகுமா? ஆகாதாவென்பதைக் குறித்துத்தான் விவாதம் ஏற்பட்டுள்ளது. பாடல்களையும் பைத்துக்களையும் பாடிக் கொண்டு அதற்குத் தோதாய் தப்புகள் அடிப்பது ஆகாதென்று பத்வாவில் கூறியுள்ள அத்தாக்ஷிகளால் உறுதியாய் விட்டது. நிகாஹ், ஜனங்களுக்குள் பிரபல்யமாகும் பொருட்டு தப்பை எடுத்து தட்டவேண்டும், பாடல்களைப் பாடிக்கொண்டு அதற்குத் தோதாய் தப்பு அடிப்பது "தரபு" என்று சொல்லப்படும் இராகம் பாடுவதில் சேர்ந்துவிடுகிறது. ஆதலால், இது ஹறாம் என்று புகஹாக்கள் பல விடங்களிலும் வரைந்திருக்கிறார்கள். இந்த பத்வாவில் தப்பை சுண்டி அடிக்கிறது ஆகாதென்று வரையப்பட்டிருக்கிறது. இதனால் ரவன் அடிப்பதும் அதனைக் கேட்பதும் ஆகாதெனத் தெளிவாய்த் தெரிகிறது.

மேலும் அல்லாஹுதஆலாவின் திக்ரையும் நாயகத்தின் புகழையும் பொதிந்தபாடல்களையும், பைத்துக்களையும் படித்துக்கொண்டு தப்பை அடிக்கிறார்கள். இதுசம்பந்தமாக அல்லாமா முல்லா அலிய்புல்காரி ஷரஹ பிக்ஹுல் அக்பரில் கூறியிருப்பதாவது :— அல்லாஹுதஆலாவுடைய திக்ருடனும் நாயகம் (ஸல்) அவர்களின் புகழுடனும் தப்பை அடிப்பானானால் அவன் "குப்ருக்கு" முடிகிவிட்டான். குப்ருடைய பாவத்தைப்பற்றி யாவரும் நன்கறிவார்கள். அதைப்பற்றி விவரிக்கவேண்டிய அவசியமில்லை. முஸ்லிம்கள் ஈமானைக் காப்பாற்ற முயலுவார்களாக.

இதனால்தான் செய்குயூசுபு லெப்பை ஆலிம்சாஹிப் அவர்கள் "பவாக்கீத்துல் பலாஹில்" அடியில் கண்டவாறு எழுதியிருக்கிறார்கள். நம்தேசங்களில் தப்பு அடிக்கும் விஷயத்தில் அநேக பித்அத்கள் ஏற்படுகின்றன. நிகாஹைப் பிரபல்யப்படுத்துவது சுன்னத்துதான். ஆனால் தப்புக்களை அடிப்பதன் மூலமாகவே நிக்காஹுகளைப் பிரபலப்படுத்தவேண்டுமென்பது அவசியமில்லை. வேறு வகையில் பிரபல்யமாய்விடுமாயின் சுன்னத்து நிறைவேறிவிடும். பலவாறாய் நிகாஹு விபரம் பலருக்கும் தெரிந்துபோகிறபடியால் இக்காலத்தில் பாடாமல் அடிக்கும் தப்பும்கூட அடிக்காமலிருப்பது உத்தமமேயாகும்.

விஷயம் இவ்வாறிருக்க, பொதக்குடி மௌல்வி அப்துல்கரீம் சாகிபிடம் பாட்டுகள் பைத்துக்கள் பாடிக்கொண்டு தப்பு அடிப்பது ஆகுமா? ஆகாதாவென்று கேட்டதற்கு, பொதுவாய்க் கல்யாணத்தைப் பிரபல்யப்படுத்துவதற்காக தப்பு அடிப்பது ஆகுமென்று எழுதிக்கொடுத்திருக்கிறார்கள். சுவாலில், பாடிக்கொண்டு தப்பு அடிக்கும் விஷயம் குறிப்பிட்டிருந்தும் ஜாவாப்பில் அதைப்பற்றி யொன்றும் கூறவில்லை. ஒரு சமயம் பாடிக்கொண்டு தப்பு அடிப்பதை ஆகுமென்று சொல்வார்களானால் அது தவறு என்பது மேல் கூறப்பட்டுள்ள அத்தாக்ஷிகளால் வெளியாய் விட்டது. பாடிக்கொண்டு அடிப்பது கூடாதென்பார்களானால், ஜவாபில் அதைக் குறிப்பிடாதது தவறாகும். தப்பு அடிக்கிறது ஆகுமென றத்துல் முஹ்தாரில் வருவதாக ஜவாபில் கூறியுள்ளார்கள். றத்துல்முஹ்தாரில் அத்துடனேயே இராகம் பாடிபடிக்கக் கூடாதென்றும் வரையப்பட்டிருக்கிறது. இராகம் பாடிக்கொண்டு தப்படிக்கும் விஷயத்தை சுவாலிலும் குறிப்பிட்டிருக்கிறது. அதை விட்டு விட்ட தன் காரணம்யாது. இம்மாதிரி விஷயங்களை மறைத்து ஒன்றிருக்க ஒன்றை எழுதிக் கொடுப்பதனால் ஜனங்களுக்கிடையில் பித்னா உண்டாக்குவது தவிர வேறெதுவும் ஏற்படாது. நமது தேசங்களில் தப்பு அடிக்கும் விதம் கனம் மௌலவி சாகிபுக்கு நன்றாய்த் தெரியும். சுவாலில் அதைப்பற்றிக் குறிப்பிட்டுமிருந்தது. அதை விடுத்துப் பொதுவாக ஜவாபு எழுதியிருப்பதைப் பார்த்தால் பாடிக்கொண்டு தப்பு அடிப்பதை ஆகுமென்று நினைக்கிறார்கள் போல்தெரிகிறது. அப்படியாயின் அது தவறு என்பதை மறுபடியும் தெரிவிக்கிறோம்.

பொதக்குடி மதரஸாவின் பத்வாவில் அதன் தலைவரான மௌலவி அப்துல் கரீம்சாகிப் அவர்கள் கையொப்ப மிடாமல் பழைய முஹம்மது அப்துல் கனி சாஹிபைக் கையொப்பமிடச் செய்து அனுப்பி யிருக்கிறார்கள். அவர்களின் கையொப்பத்துடன் பத்வா வேண்டுமென்று கேட்டதற்கு மதரஸாவுக்காக ரூ 5-கேட்டார்களாம். அதன்படியே ரூபாய் அனுப்பிக் கையெழுத்துக் கேட்கப்பட்டதாம். அதற்கும் சாக்கு போக்கு சொல்லி யனுப்பி விட்டார்களாம். ஆதாரமற்ற பத்வாக்களில் இப்படித்தான் யாரையாவது கையொப்பமிடச் செய்து அனுப்புவது கனம் மௌல்வி சாஹிபுக்கு வழக்கம். அதன்படியே தப்பு விஷயத்திலும் நடந்திருக் கிறார்போலும். இதைப்பற்றிப் பல

முறையும் அவர்களுக்கு ஜனங்களால் எடுத்துரைக் கப்பட்டிருக்கிறது. மத்ரஸாக்களில் பத்வா கேட்கப் படுமாயின் மத்ரஸாவின் தலைவர் கையொப்பமிடாமல் பத்வா வெளியிடுவது வழக்கமில்லை. எல்லா மத்ரஸாக்களிலும் இந்த வழமைதான் நடந்துவருகிறது. ஆனால் பொதக்குடி மத்ரஸாவின் தலைவர் மாத்திரம் தாம் எழுதும் பத்வாக்கள் அநேகத்தில் தாம் கையெழுத்துச் செய்வதற்குப் பதிலாக தனது சிஷ்யன் ஒருவனைக் கையெழுத்துப் போடும்படிச் செய்து வருவதிலிருந்து அவர் எழுதும் பத்வா ஆதாரமற்ற தென்றும், அதற்குமறுப்பு எழுதப்படும் என்றும் அவர் அறிந்தே அவ்வாறு செய்கிறார் என்று யூகிக்க இடமுண்டாகிறது. அறியாத ஜனங்கள் கேட்கும் கேள்விகளுக்கு, அறிந்த ஆலிம் மார்க்கத் தீர்ப்புகள் இவ்வாறு கொடுக்கலாமா? இவ்வாறு பத் வா கொடுப்பவர் ஆண்டவனைப் பயந்த உண்மையான ஆலிமாவாரா? நேயர்களே கவனித்து உணருங்கள்.

இப்படிக்கு:

எம். அப்துஸ்ஸமத் சாகிப்,

சென்னை.

---

# சிங்கை நிரூபம்

"அல்கலாம்" ஆசிரியர் கூ. அ. அப்துல் மஜீது ஸாஹிப் அவர்கட்கு......................அஸ்ஸலாமு அலைக்கும். இக்கடிதம் இதனுள் வரும் உபசாரப் பத்திரம் ஆகியவைகளை அல்கலாமில் பிரசுரிக்கக் கோருகிறோம்:—

காருண்ய புருஷராகிய மகா கனம் ஜனாப் ஹஜ்ரத் மௌலானா மௌல்வி முஹம்மத் ஷர்புத்தீன் ஸாஹிப் அவர்கள் இச்சிங்கைமா நகருக்கு விஜயஞ் செய்தது இந்நகரின் பேரதிர்ஷ்ட மென்றே கூறல் வேண்டும்.

ஹஜ்ரத் அவர்கள் இந்நாட்டில் புரிந்த மார்க்க ஊழியம் சாமான்யமான தன்று. காதியானீ அஹ்மதியா பிரசாரகரான பா. தாவூத்ஷா ஸாஹிப் B. A. அவர்கள் சூரியனைக் கண்ட பனி போல் இந்நகரை விட்டு ஓடும்படிச் செய்த ஜனாப் ஹஜ்ரத் அவர்களை மறக்க வியலாது.

பெரிய மகானைப் போல் வேடம் பூண்டு இந்நகர வாசிகளைப் படுகுழியில் தள்ளுவதற்காக வந்திருந்த ஒரு தீயாரைப் பெரிய மகானென்று நம்பி வழிகேட்டிற் காளாயிருந்த நம் சகோதரர்களை ஜனுப் ஹஜ்ரத் அவர்கள் தங்களின் அரிய முயற்சியால் நேரான வழியில் திருப்பிய வரலாற்றை நினைக்கும் போதெல்லாம் மகிழ் வெய்து கிறோம்.

கிந்தா (Knita) வென்னும் கப்பலில் 10-8-25-ல் ஜனுப் ஹஜ்ரத் அவர்கள் தங்கள் தாய் நாட்டிற்குப் பிரயாண மானதை யொட்டி வழியனுப்பு வதற்காக எண்ணிறந்த ஜனங்கள் திரள் திரளாய் வந்து குவிந்து விட்டனர். இது ஆச்சரியத்தை மூட்டத்தக்கப் பெரும் காக்ஷியாகவே யிருந்தது.

ஜனுப் ஹஜ்ரத் அவர்கள் சுகமே தங்கள் நாடடைந்து மீண்டும் சுகமே இச்சிங்கைமா நகர் தோன்றி எங்களுக்கு சமுகம் தரும்படி எல்லாம் வல்ல அல்லாஹ் ஜல்லஷானஹுவதஆலா அருள் புரிவானாக. "ஆமீன்" "ஆமீன்."

இங்ஙனம்.

சிங்கப்பூர்.
14—8—25.

(1) அ. மு. க. அப்துல் ரஜாக், மரைக் காயர்.
(2) கு. செய்குதாவூது.

---

## பிரிவுபசாரப் பத்திரம்.

1925ஹு ஆகஸ்ட்டுமீ 10உ திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு சிங்கப்பூர் முஸ்லிம்கள் சார்பாக ஜோன்சன் பீரினில் கனம். துப்பாஸ் காதர் மஸ்தான் அவர்களால் வாசிக்கப்பெற்றது :—

வன்மையுந் தன்மையும் வாய்ந்த மஹா கனம் மௌலானா மௌலவி ஷர்புத்தீன் ஸாஹிப் ஜனுப் அவர்களே! இன்று இதோ கூடியிருக்கும் பரிசுத்த மார்க்கத்தினராகிய அஹ்லே சுன்னத்வல்ஜமாஅத்தார்களின் சார்பாக நான் தங்களின் அரிதான சமுகத்துக்குப் பிரிவுபசாரஞ் சொல்லும் பாக்கியம் பெற்றதற்காக றஹ்மானைப் புகழ்கிறேன்.

மாசற்ற மரபுதித்த மஹானே!! எங்கள் ஜமாஅத்தாரின் உண்மையான கொள்கையை மருந்திட்டு கொல்லநினைத்த மறைநெறியறியாத காதியானிக் கூட்டத்தைச் சார்ந்தவரான தாவூத்ஷா என்பவர் தான் ஓர் சுன்னியென்று வெளிவேடம் பூண்டு வேஷதாரியாய் இங்கு

சில வாரங்களுக்கு முன்தோன்றி நிந்தனைக்குரிய தனது அந்தகாரக் கொள்கையை எங்கள் ஜமா அத்தினரின் உள்ளத்தில் பதியச்செய்து பாழ்படுத்த வேணுமென்ற பித்தம் பிடித்தவராய் பஹீரதப்பிரயத்ன மெடுத்து பல்வேறு விதமாய்ப் பிதற்றித்திரிந்து கொண்டிருந்தா ரென்பது உலகறிந்த விஷயமே.

ஆனாலுமென்ன? நபி இப்ராஹீம் அலை ஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம், நபி மூசா அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம், அவர்களைக்கொண்டு அக்காலத்திய நம்றூதின் ஆட்சியை நாசபடுத்தியவனும் பிர் அவ்னைப் பிணக்கோலங் கொள்ளச் செய்தவனுமான, எல்லாம்வல்ல அல்லாஃ ஜல்லஷஃனுஹூ வத ஆலா இக்காலத்து எங்கள் சமூகத்தில் மல்ஊனாய்த் தோன்றிய காதியாணிக் கூட்டத்தை மறைந்தொழிந்து போகும் பொருட்டு நபிமார்களின் அனந்தரக் காரர்களிலொருவரா யுள்ள தங்களை எங்கள்மத்தியில் இருக்கச்செய்து அந்தப் பொல்லாக் குபாடரை நம்மைவிட்டகற்றி விரண்டோடச் செய்து எங்கள் பரிசுத் தமார்க்கத்தைப் பிரகாசிக்கச் செய்தானென்று துதித்து மேலும் அந்த உண்மை நாயனைப் பன்முறையுந் துதிக்கின்றோம்.

கல்வியின் சுடர்பிரகாசிக்குங் காருண்ய புருஷரே !!! இந்த வரலாற்றைப் பற்றிய சம்பவங்களை இங்கு விவரிப்பதென்றால் நேரம் போராமலிருப்பதர்க்கு வியசனிக்கிறோமாயினும், முஸ்லிம் உலகமக்கள் அவ்வவ்வகாலத்திலும் செவ்வையா யுணர்ந்து கொள்ளும் பொருட்டு மிர்ஸாகுலாம் அஹ்மது காதியாணிக் கூட்டத்தின் வழிகேடுகளையும் பல்வேறு சமாசாரங்களையும் ஒருங்கே திரட்டி நம திருப்பிடம் வந்து அறிவித்துக் கொண்டிருக்கும் ஸைபுல் இஸ்லாம் பத்திரிகையென்னும் ஓர் பால்யகுமாரனை இன்று நமது சமூகம் உடைத்தாயிருக்கும் பாக்கியம் பெற்றிருப்பதர்க்கு மகிழ்வடைகிறோம்.

மார்க்கக்கலையின் போக்கிஷமே !!!! சுருங்கச்சொல்லுமிடத்து இங்கு பெற்றுள்ள காதியானிப்போரின் முடிவானது, நமது தென்னிந்தியாவிலேயே என்றும் நடைபெற்றிராத அத்துணை வீரஞ் செறிந்த அருமைப் போராட்டத்தின் ஜெயபேரிகையாய் முடிந்துவிட்டது மாத்திரமல்ல எங்கள் மத்தியில் காதியானிக் கூட்டுறவையே வேரோடு களைந்து வீசி யெறிந்து விட்டீர்களென்பதற்கு 12வ டவுன்ஹாலில் நடந்தேறிய ஸர்வமுஸ்லிம் மகாநாட்டின் தீர்மானமே போதிய சான்றாகும்.

எங்கள் அன்பார்ந்த சகோதரரே! தங்களை சுகஜீவியாய்த் தாய் தேசஞ்சேர்ந்து தங்கள் வாழ்நாளை விரிவாக்கிவைக்குமாறு வல்லமைப்பொருளான அல்லாஃ ஜல்லஜலாலுஹூ வத ஆலாவிடம் யாங்கள் கரமேந்தி பிரார்த்தனை செய்து தங்களோடு முஸாபஹா செய்தவர்களாய்ப் பிரிவுபசாரஞ் சொல்கிறோம்.

சிங்கப்பூர் முஸ்லிம்கள்.